REGD M

சந்தா விபரம்
—
1 ஆண்டு ரூ 7,
½ „ 3 8 0

# திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் | மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 13—11—49 | இதழ் 20

## ஒன்றுமே இல்லை!

"நாடு சுதந்திரமடைந்துவிட்டது. இதனால் தனிப்பட்ட மக்களுக்கு என்ன பலன் கிடைத்தது? தனிப்பட்ட வாழ்க்கை சிறந்ததா? ஆந்திரர்கள், குஜராத்திகள், மார்வாடிகள், தமிழர்கள், இதரர் யாராயிருந்தாலும் அவரவர்கள் கலை, பாஷை, கலாசாரம் முதலியவற்றை அபிவிருத்தி செய்து கொள்ள மார்க்கம், சுதந்திரம் உண்டா? இவை இல்லையென்றால் சுதந்திரம் அடைந்துதான் பயனென்ன? ஒன்றுமே இல்லை."

ஆர். கே சண்முகம்
6—11—49

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

லண்டனில், இரகசிய இலாகாவின் அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு புகைபிடித்துக் கொண்டிருந்த சிட்னி ரீலிக்கு லெனின் மறைவு பற்றிய செய்தி எட்டியதும், துள்ளி எழுந்தான்! அவன் மூளை சுறு சுறுப்பாக வேலை செய்தது—ரஷ்ய சர்க்காரை எதிர்த்து நிற்கும் சமுதாயப் புரட்சிக் கட்சித் தலைவன் சாவின் கோவை ஆட்டக்காயாக வைத்துக்கொண்டு தனது 'திருவிளையாடல்களை'த் துவக்க, ரீலி, திட்டமிட்டான்! சாவின் கோவ், இந்த நேரம் பிரான்சில் வசித்து வந்தான்.

சாவின் கோவுக்குத் தகவல் தந்துவிட்டு, ரீலி, ஐரோப்பா முழுமையும் சென்று, அவனுக்கு ஆதரவு திரட்டினான்; இத்தாலியில முஸோலினி, சாவின் கோவை—எதிர்கால ரஷ்ய சர்வாதிகாரி யென்று, ரீலியால் அழைக்கப்பட்ட சாவின் கோவை—பெருமிதத்துடன் வரவேற்று,ரஷ்யாவுக்குள் நுழைய 'பாஸ்போர்ட்' வாங்கித் தந்தான்!

பொதுவுடைமைச் சர்க்காரைக் கவிழ்க்கும் திட்டம் பற்றி ரீலியுடன் அளவளாவிவிட்டு,ரஷ்யாசென்றதும் தகவல தருவதாகக் கூறிப் புறப்பட்டுச் சென்றான் சாவின் கோவ்! சாவின் கோவ் சென்றிருப்பான், சகாக்களைத் திரட்டியிருப்பான் என்று பாரிசிலிருந்தபடி பகற்கனவுகள் கண்டுகொண்டிருந்த ரீலிக்கு 1924 ஆகஸ்டு 29ந் தேதி வெளிவந்த தினத்தாள் பின்கண்ட செய்தியைத் தந்தது:

> "முன்னாள் கலகக்காரன் சாவின் கோவ் ரஷ்ய எல்லையைத் திருட்டுத்தனமாகத் தாண்ட முயற்சித்தபோது சோவியத் அதிகாரிகளால் பிடிபட்டான்"

சாவின் கோவ், விசாரணையில் அவன் சர்ச்சிலைச் சந்தித்தது முதல் முஸோலினியுடன் விருந்துண்டது வரை, ரீலியின் செய்கைகள் உள்பட விபரமாக வெளிவந்தது. செய்தியறிந்த ரீலி திடுக்கிட்டான். பரபரப்புடன் லண்டன் சென்று சிலநாள் தங்கிவிட்டு, அமெரிக்காவுக்குச் சென்று, ரஷ்யாவுக்கு எதிரான வேலைகளுக்கு ஆதரவைத் திரட்டினான். நியுயார்க்கிலிருந்தபடியே,பெர்லின், லண்டன், பாரீஸ், ரோம, கஞ்சூரியா, ஜப்பான் ஆகிய இடங்களிலிருந்த தனது கிளைக்கழகங்களுக்குத் தகவல்களும் திட்டங்களும் தந்துவிட்டு, 1925 ஆகஸ்டு 6ல் ஐரோப்பா கிளம்பி, பாரீஸ் சேர்ந்தான்.

லெனின் இறந்தபின், ட்ராஸ்கி தலைமையில் சோவியத் எதிர்ப்பு உருவாகி வந்தமையால் அதனுடன் தொடர்பு கொண்டு, போல்ஷிவிச சர்க்காரைக் கவிழ்க்கத் துடி துடித்த ரீலி, பின்லாந்து சென்று, 'பின்னிஷ் பாஸ்போர்ட்' ஒன்றுவாங்கிக் கொண்டு 1925, செப்டம்பர் மாதம் 5-ம்தேதி ரீலி ரஷ்யாவுக்குப் புறப்பட்டான். புறப்படுவதற்கு முன்னால் அவசரமாகத் தன் மனைவிக்கு ஒரு கடிதம் எழுதினான்.

"தற்சமயம் முற்றிலும் புதியதும், சக்தி வாய்ந்ததுமான விஷயம் கிடைத்திருக்கிறது. ஆகவே மூன்று நாட்களுக்கு நான் ரஷ்யாவிற்கு செல்லவேண்டியதாகிறது. இன்றிரவு பீட்ரோகிராட் செல்கிறேன். அங்கிருந்துமாஸ்கோசென்றுவிட்டுச் செவ்வாயன்று திரும்புவேன்."

இந்தச் சாராம்சத்தை கொண்ட கடிதத்தை பாரிசிலிருந்த தன் மனைவிக்கு அனுப்பிவிட்டு ரீலி ரஷ்யா சென்று விட்டான்

இதுதான் ரீலியிடமிருந்து அவன் மனைவிக்குக்கிடைத்த கடைசியான கடிதம்

செவ்வாய் போனது. ரீலியின் மனைவி ஆவலோடு அவன் கடிதத்தை எதிர்பார்த்த வண்ணமிருந்தாள்.

ஒரு வாரமாகியது......பலவாரங்களாகின.

ரஷ்ய எல்லையைத் தாண்டிய ரீலி லெனின்கிராட், மாஸ்கோ இரு நகரங்களுக்கும் சென்று ஸ்டாலின் எதிர்ப்புக் கோஷ்டியினரைச் சந்தித்துப் பேசிவிட்டு 28—29-ம் தேதி திரும்பியிருக்கிறான். வரும் வழியில் ரஷ்ய எல்லையில் செஞ்சேனை வீரர்கள் ரீலியைக் கண்டு பிடித்து விட்டனர். ரீலியும் அவன் ஆட்களும் தப்பித்து ஓட முயற்சி செய்கையில் செஞ்சேனை வீரர்கள் சுட்டனர். ரீலி அந்த இடத்திலேயே இறந்து விட்டான்......"

1917 நவம்பர் 7, ரஷ்யப் புரட்சிக்குப் பின், முதலாளித்துவ 'முகாம்' களால் திட்டமிட்டு நடத்தப்பட்ட இந்தச் சதி வீழ்ந்தது. சதிகாரனாக இருந்த ரீலியின் 'கதி' பரிதாபகரமாக முடிந்தது!

## தியர்க போதனை

4-ம் பக்கத்தொடர்ச்சி

கிளம்பி, உதட்டையும் தாண் வெளிவந்திருக்கும் என்பதல் நாம் இப்போது கவனிக்க வேண் யது!

சுரண்டுபவர்கள் சுரண்டி கோண்டே இருக்கிறார்கள்!

சர்க்கரை, கடைகளில் வெளி படையாகக் கிடைக்கவில்லை!

ஆனால் கள்ளமார்க்கெட்டில் சகஜமாகக் கிடைக்கிறது!

இது இப்போதுள்ள நிலை சர்க்கரை கிடைக்கவில்லையென்று ம கள் திண்டாடுகிறார்கள், தேடி அ கிறார்கள் கடைகளில். இதற்கு காரணம் சர்க்கரையே இல்லாம போய்விட்டது என்றல்ல அர்த்த சர்க்கரை இருக்கிறது—ஏராளம ஆனால் அது கடைகளில் அல் கள்ளமார்க்கெட்டில்!!

சுரண்டிக்கொண்டே, வாழ்வை நடத்தும் சுகபோகிகள், கள்ளமார் கெட்காரர்கள் சுகபோகிகள வாழ்ந்து கொண்டிருக்கிறார்க அவர்கள் பக்கம், தன்கருத்தைமட் மல்ல,கண்ணைக்கூடத் திருப்பிப்பா கவில்லை 'கனம்' ஆளவந்தார்க 'தியாகம்' செய்யுங்கள் என்று தி வாய் மலர்ந்து உபதேசிக்கத்துணி வில்லை. ஆனால், அதற்குப்பதி வாடிவதங்கும் வறுமைக் கூட் துக்கு, பொதுமக்களுக்கு போத புரிகிறார்கள், "தியாகம்" செய்யு கள்! இல்லாவிட்டால் என செத்தாவிடுவீர்கள் என்று!

ஏன் இது, பணமுதலைகளை, ப கொள்ளைக்காரர்களை வாய்திறந்து ஒரு கேள்வியோ, 'பணத்தியாக போதனையோ புரியாமல, பொது களிடம் வந்து போதிக்கவும் உ தேசிக்கவும் வந்து உலவுகிறார்களே ஆளவந்தார்கள், ஏன் இந்த முர பாடு என்றுதான் கேட்கத்தோ றும். கள்ளமார்க்கெட் காரர்க பற்றி வாய்கூடத்திறக்க வக்கற் வர்கள், வறுமை உலகில் வந் கொட்டியளக்கிறார்களே என எண்ணத்தான் தோன்றும். இதற் என்ன பதிலைக்காண முடியும்!

# ★ தியாக போதனை ★

—✲—

தியாகம் செய் கள் தியாகம்!'

து என்ன, ை வாங்கும் ேரை" என்று கூவுவதுபோல க்கிறதே,என்றுநினைக்கிறீர்களா! சே, அப்படியெல்லாம் எண்ணு ள், இதுசமயம் தவறினால் மறு ம் வாய்க்காது, ஏதோ கொஞ் நீங்களும் தேடிவைத்துக்கொள் கள்! தியாகிகள் உலகிலே, பின் ளுக்கு இடம் கிடைக்காமல் ுலும் போய்விடும், நேரம் ந்து போதிக்கிறார், 'கொஞ்சம் யுங்கள் என்று!'

ப்பொழுது பார்த்தாலும், காலமும், அறுசுவையு உணவருந்திவிட்டு, ஆடிப்பாடி, கைகளிலேயே எப்பொழுது த்தாலும் உல்லாசமாகத்திரிந்து ண்டிருக்கும் போதுமக்களே, ளுக்குத்தான் சொல்கிறார்— யுங்கள 'தியாகம்!' என்று!

வலை கொஞ்சங்கூட இன்றி, கஷ் டாது, மதோன்மத்தர்களாய், ன செய்வது என்று புரியாமல், ளவு ஏராளமாக நம்மிடம் ந்துபோய்க் கிடக்கிறதே உண பணமும் வாழ்வும், என்று றும் புரியாமல் விழித்துக் ண்டு நிற்கிறீர்களல்லவா! உங் க்குத்தான் சொல்கிறார்—அவர், யுங்கள், அதுவும், இடை து, விட்டுக்கொடுக்காது, "தியா செய்யுங்கள் என்பதாக!

ங்கள், செய்யும் தியாகம் சாதா ாக, இலேசானதாக இருக்கக் து. நான் சொல்லவில்லை, அவர் ல்கிறார்! போட்டிவேகம் 'அவனை நான்தான் அதிகம் செய்துவிட் ' என்ற பூரிப்பு ஏற்படவேண் அவ்வளவு, ஆர்வத்துடன், கம் செய்யுமாறு கூறுகிறார். ங்கள், ஏதாவது "தியாகம்" ஆரம்பியுங்கள்!

• • •

இதென்னப்பா, திருக்கூத்து? வயிறு கஞ்சிக்கே நான் ஆலாப் கிறேன். யார்உல்லாசமாக உலவு கள்! ஒருநாள் உணவுக்குச் சம் க்கவே, ஊர்முழுதும் அலைகின் ் நான், மதோன்மத்தனாக மகிழ்ந்து கிடக்கிறேன்? என்னப்பா, உனக்கு ஏதாவது மூளைக் கோளாறோ! அல்லது, யாரோ, செய்யச் சொல்கிறார், என்கிறாயே, அவர் என்ன ஒன்றுமேபுரியாத 'புது, ஆசாமியோ, நம்நாட்டுக்கு! என்று தானே, ஆத்திரத்துடன் கேட்க எண்ணுகிறீகள்!

கேட்காதீர்கள், அது தேசத் துரோகமான காரியம்! அப்படிக் கேட்டாலும், "அவர்" பதில்சொல்ல மாட்டார். அவர் அவ்வளவு பெரிய வர், அவருக்கிருக்கும் எத்தனையோ வேலைப்பளுவில் இதற்கெங்கே பதில் கூறமுடியப்போகிறது! இல்லை, கேட் கத்தான் கேட்போம், என்று விதண் டாவாதம் செய்தால் ஒரு வேளை அவருக்கு 'வேகம்' வந்தாலும் வர லாம்! விளைவு, விபரீதமானதாகஆறு லும், ஆகலாம்! அவ்வளவு பெரிய வர், இந்தியாவுக்கே ஒரு இரும்பு மனிதர், இந்த உபகண்டத்தின் துணைப்பிரதமர்!

ஆமாம்! பட்டேலைத்தான் குறிப் பிடுகிறேன், அவர்தான் கூறியிருக்கி றார் உங்களுக்கு—நாட்டுமக்களுக்கு — தியாகம் செய்யுங்கள் தியாகம் என்று!

அதுவும், தியாகம், என்றாவது ஒருநாள் செய்துவிட்டு.. பின் நீங்கள் இருந்துவிடக்கூடாதாம்! ஒழுங்காக விட்டுக்கொடுக்காமல், எலலாவகை களிலும், தியாகம் செய்யவேண்டு மாம், அதுவும் போட்டி வேகத்து டன், ஒவ்வொருவரும் அந்த நற் காரியத்தில் ஈடுபடவேண்டுமாம்!

* * *

அண்மையில், அவரது பிறந்த நாள் விழா டெல்லியில் கொண்டா டப்பட்ட பொழுது, பேசுகையில் அவர் கூறியுள்ளார் தியாகம் செய்வதில் போட்டி வேகமும், பொறுப்பும் இருக்கவேண்டும். அப் படித் தியாகம் செய்வதுதான் நாட் டுக்கு நலன் விளைவிக்கும் என்ப தாக!

தியாகம் செய்யத்தானே வேண் டும், நாடும் மக்களும் திண்டாடித் தவிக்கையில், அவர்களுக்குஒரு நல்வாழ்வு தேடித் தர, அது அவசிய மல்லவா, என்று கேட்கத்தோன்றலாம்! இதில்என்ன தவறோ, தப்புஎண்ணமோ, இருக் கிறது என்றும் கேட்கலாம்!

உண்மைதான், தியாகம், செய்ய வேண்டியதுதான். அதுவும் ஒட்டப் பரும், உயரப்பரும், ஒருங்கே உல வும் ஒரு நாட்டைச் சீர்படுத்த "தியாகம்" செய்யப்படாமல் முடி யாதுதான்.

மாடமாளிகையில் வசிப் போர், உழைக்கும் விவசாயியைச் சுரண்டி உயிர் பிழைப்போர், கள்ள மார்க்கெட்டில் கொள்ளை லாபம் அடிப்போர், அத்தனை பேரும், ஓரளவு தங்கள் சுகபோகங்களை, சுய நலத்தை 'தியாகம்' செய்யத்தான் வேண்டும்! அப்போதுதான், ஏழ்மை யும் வறுமையும் தாண்டவமாடும் மக்கள் ஏதாவது பெற்று மகிழ்வு பெற முடியும்!

ஆனால், பட்டேல் செய்திருக்கும் "தியாக போதனை" 'உயரப்பர்'களுக் கல்ல! வாழமுடியாது, பசி யும், பட்டினியும், பணநெருக்கடியும் தாக்கக் குடும்பத்தை நடத்த வழி யின்றிக் கொந்தளித்துத் தவிக் கிறோமே, ஏழை மக்களாகிய நமக் குச் சொல்கிறார், தியாகம் செய்யுங் கள் என்று! ஏதோ, இங்கிருக்கும் மக்கள் யாவரும், உண்டு களித்து, பட்டு மெத்தையில் படாடோபமா கப் படுத்துப் புரண்டுகொண்டுகிடக் கிறோம், என்ற நினைப்புடன்! நாம் தியாகம் செய்யவேண்டுமாம்! அது வும் போட்டி வேகத்துடன், அவரைவிட நான்தான் அதிகமாகச் செய்தேன் என்ற ஆசையுடன் செய்யவேண்டுமாம்! அதுதான், நாட்டுக்கு நல்லது செய்யுமாம்!

• • •

பதறித்துடிக்கும் பரிதாப பிம்பங் களாகிய நமக்கு, தியாக உபதேசம் செய்திருக்கிறாரே, பட்டேல் அது எப்படிப்பட்டது தெரியுமா! காங்கி ரஸ் தோழர்களின் ஆகஸ்டுத்தியாகம் போன்றது கூட அல்ல, உலகவாழ்வு முன்னேற என் உயிரைக் கொடுப் பேன் என்று செய்கிறார்களே, அது

போன்றதல்ல, சுகபோகங்களைத் துறந்து நாட்டுப்பணிக்கு, பொதுச் சேவைக்குத் தங்களை அர்ப்பணித்துக்கொள்கிறார்களே அதுகூட அல்ல! பட்டேல் தரும் "தியாக விளக்கம்" இருக்கிறதே, அது புதிதானது, யாரும் இதுவரை ஈடுபடாதது, நாட்டில் வாழும் 'ஓட்டப்பர்' எல்லாம் 'ஒன்றுமில்லாதப்பர்' ஆகக்கூடியது, அத்தகைய "முக்கியத்துவம்" பொருந்தியது!

சர்க்கரை கிடைக்காமல் நாடுமுழுமையும் திண்டாடி, தெருவில் நின்று கொண்டு. வாழ்க்கைக்கு அத்தியாவசியமான ஒரு பொருள் கிடைக்கவில்லையே, 'கொள்ளை பணம், கொடுத்து எங்களால் வாங்க முடியவில்லையே என்று பதறி நிற்கிறார்களல்லவா, மக்கள்! அது பற்றிப் பேசும் போது தான் இந்தியத் துணைப் பிரதமர், காங்கிரஸ் கனவானை அவர் மேற்கூறிய விதமாகத் "தியாக போதனை" செய்துள்ளார்!

"நமக்குச் சர்க்கரை தேவையென்றால் அது கிடைக்கவில்லையென்பதற்காக நாம் செத்துவிடப் போவதில்லை. அதுபற்றி ஆத்திரம் வரலாம் ஆனாலும் நாம் வாழ முடியும், ஆகவே நாம் கொஞ்சக் காலத்துக்கு சமாளித்துத்தான் ஆகவேண்டும். அதைவிட்டுவிட்டு, கிடைக்கவில்லையென்பதற்காக, முணு முணுத்து முனகுவது ஏன் என்று எனக்குப் புரியவில்லை!" என்று விளக்கமாகப் பேசியிருக்கிறார். இதைத் தெரிவிக்கு முன் தான் அவர் மக்களிடையே 'தியாகம்' எற்படவேண்டியதன் அவசியம் பற்றிக் கூறியிருப்பது. இப்போது புரிகிறதல்லவா! பட்டேல் கூறும் 'தியாகம்' எது என்பது! சர்க்கரை இல்லாவிட்டால் நாம் என்ன செத்துப்போகவா போகிறோம், அப்படியில்லையே; ஆகவேஏன் அதிருப்தி படுகிறீர்கள்? சர்க்கார் குறை தீர்க்கவில்லை என்று ஏன் குறை தெரிவிக்கிறீர்கள்! அதுகூடாது இதிலெல்லாம் "தியாகம்" காட்டவேண்டாமோ, என்று அருஞ்சொல் உபதேசிக்கிறார் அவர்!

உண்மைதான், அவர் கூறுவது போல, சர்க்கரை கிடைக்கவில்லை என்பதற்காக நாம் உடனே செத்துவிடப்போவதில்லை! உயிரோடு உலவமுடியும்! சர்க்கரை ஒன்றுமட்டுமல்ல, துணி போதுமானதாகக் கிடைக்கவில்லை யென்றால், எல்லோரும் விழுந்து இறந்துபோய்விடமாட்டார்கள்! இன்னும், அரிசி, போன்ற முக்கிய உணவுப்பொருள் தவிர ஏனைய மிளகாய், பருப்பு, உப்பு, முதலானவை கிடைக்கவில்லை யென்றாலுங்கூட மக்கள், உடனடியாகச் செத்து விழுந்துவிடமாட்டார்கள்!

முழுஉடம்பைத் துணி போர்த்தி மறைத்தவர்கள் "கோவணாண்டி"களாக உலவினாலும் உயிரோடுவாழத் தான் செய்வர்! குழம்பு, சாம்பாருடன் சாப்பிட்டவர்கள் வெறும்சோற்றைமட்டுமே தின்றாலும் செத்துவிடமாட்டார்கள்! உயிர் இருக்கத் தான் செய்யும்!

ஆனால், நமக்கு, பட்டேலின் 'பதவுரை' கேட்டதும் நகைப்பு ஏற்படவில்லை, நாடாளவந்த மகானுபவர்கள், மனதில் சிறிதுகூடச் சங்கடமில்லாமல், 'இது இல்லாவிடில் இறந்தா போய்விடுவீர்கள், அது கிடைக்காவிட்டால் உயிராபோய் விடும்!' என்று கேட்கிறார்களே வாய்விட்டு, மனந்திறந்து, என்பதற்காக வேதனையே உருவாகிறது!

யாரும், எந்த அரசாங்கமும், அன்னிய ஆதிபத்தியக் காலத்திலும் கேட்காத கேள்வியை, கேட்கவும் விரும்பாத ஒரு கேள்வியை, வெகு அனாயாசமாகக் கேட்கின்றனர், மக்கள் பெயர் சொல்லி மன்றம் ஏறிய 'மகா' புண்ணிய மூர்த்திகள்!

பட்டேல் மட்டும்தான் என்றல்ல, அவரது படைவரிசைகள்கூட இதே 'பாணி'யிலேயே இப்போது பேசிவரத் துவங்கியுள்ளனர். அண்மையில் தூத்துக்குடியில் பேசுகையில் பேசிய மாகாணப் பொதுப் பணி அமைச்சர் பக்தவத்சலம் "மக்கள், சர்க்காரைக் குறைகூறக் கூடாது" என்றும், தமிழ் நாட்டில் காங்கிரசுக்கு உறுப்பினர் சேர்க்கும் வேலையிலீடுபட்டுஉழைக்கும் தோழர் காமராஜ் பலஇடங்களில், "சர்க்காரே எல்லாவற்றையும் எப்படிச் செய்து தர முடியும்?" என்றதோரணையிலும் பேசி வருகின்றனர். தேனும் பாலும் எங்கள் ஆட்சியில் பெருக்கெடுத்தோடும் என்று கர்ஜனை புரிந்த கனம்கள், இன்று 'கோபுரம்' ஏறிய கோமான்கள் ஆகிவிட்டபின், கூறுகின்றனர், சர்க்காரை எதற்கெடுத்தாலும் எதிர்பார்க்கலாமா! குறை கூறலாமா! "இது" கிடைக்காவிட்டால் என்ன, அது "அகப்படாவிட்டால் அப்படியே உயிராபோய் விடும்!" என்றெல்லாம்.

அரசாங்கம் என்றால், அது மக்களின் நன்மைக்காக, அவர்கள் சுகம் பெறும் பொருட்டு நடத்தப்படுவது தான். ஆனால், இந்த நினைப்புக்கூட, "இவர்களுக்கு" மறைந்து விட்டதாகவே தெரிகிறது. அது மட்டுமல்ல, மக்கள் நல்வாழ்வு கொண்டு, இன்பம் கொழித்து வாழ வேண்டும் என்ற எண்ணமோ, நாடு வளம்நிரம்பிவழிகிறது என்றுபூரிக்க வேண்டிய ஆசையோ கூட இவர்களுக்கு எழும்பவில்லை! சாப்பிடாவிட்டாலும், எப்படியும் உயிர் வாழ்வார்கள், அவர்கள் உயிர்உடலைவிட்டும் நீங்காது இருக்கவேண்டுமானால் எவ்வளவு குறைத்துப் போட்டால் போதும் என்று புள்ளி விபரம் சேகரித்து அதன்படியே வாழவைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் போலும்!

மக்கள் வாழ்வுக்கு வசதி செய்து தர முடியவில்லையே யென்று வருந்தி, ஏங்கி, துடிக்கவேண்டிய மகானுபாவர்கள், காரில் பவனி வந்து கொண்டு, உபதேசம் புரிகிறார்கள், 'அது இல்லாவிட்டால் என்ன' 'இது கிடைக்காவிடில் செத்தா போய்விடுவீர்கள்' என்ற மாதிரியில். விசித்திரமானது, அதுவும் எந்த நாட்டிலும் நடக்க முடியாதது!

தேசியம், காங்கிரஸ், சுயராஜ்யம் பெற்றுத் தந்தோம் என்ற போலித் திரைகள் மூலம், மறைந்துகொண்டு, உள்ளத்தைப் பொசுக்கும் இந்த வார்த்தைகளை நாம் கூறினால் யார் கேட்க முடியும் என்ற துணிச்சல் தவிர வேறென்ன இருக்க முடியும், இவர்களுக்கு!

* * *

மக்கள் தியாக சிந்தனையுள்ளவர்களாக இருக்கவேண்டுமாம், தியாகம் என்ற சொல்லுக்குப் புது வியாக்கியானம் தரப் புறப்பட்டிருக்கிறார்கள், 'புண்யவான்கள்!' எவ்வளவு நெஞ்சழுத்தமும், மக்களை மரமண்டைகள் என்று நினைக்கும் மனப்பான்மையும் இருந்திருந்தால், இந்த வார்த்தைகள், இதயத்திலிருந்து

(2-ம் பக்கம் பார்க்க)

# ★ திருப்தி அவருக்கு! ★

மாகாண நிதி நிலைமை திருப்தி ரமாயிருக்கிறது, தேவைக்கான ருமானம் அதிகரித்திருக்கிறது ன்று அறிவிக்கிறார் நம் நிதி மந்திரி காபாலர்.

மதுவிலக்குக் காரணமாக ரூ 13 காடி நஷ்டம் ஏற்பட்டிருந்தும், ருமானம் ரூ 5 கோடி அதிகமாக ருப்பதாகக்கடந்தவாரம்,வானொலி ல் பேசுகையில் தகவல் தந்துள் ார் அவர்.

ஆலோசகர் ஆட்சியின் கடைசி ண்டில், அதாவது 1945—46ம் ண்டு வருமானத்தையும் இந்த ண்டு கிடைத்த வருமானத்தை ம் ஒப்பிட்டுக் கூறுகிறார், இப்போ தய வருமானம் அதிகம் என்று.

கடந்த ஆண்டு மதுவிலக்கு ரணமாகச் சர்க்காருக்கு ஏற்பட்ட ஷ்டத் தொகை ரூ 13 கோடி ன்றும், அவ்வளவு 'துண்டு' ழுந்தும் கூட அது சமாளிக்கப் ட்டு அதற்கு மேலும் ரூ 5 கோடி திகம் வந்திருப்பதாக அறிவிக் றார் அவர்,

945—46 மொத்த வருமானம் ரூ 47,99,00,000

48—49 „ ரூ 53,25,00,000

மதுவிலக்கு நடவடிக்கை சர்க்கா ல் மேற்கொள்ளப்பட்டும் ஆலோச ஆட்சிக் காலத்தைவிட ருமானம் ரூ 5,26,000 அதிகமாகி ருக்கிறது. அதாவது 13 கோடி கோடி ஆக 18 கோடி ரூபாய், திக வருமானம் வந்திருக்கிறது ன்பதற்கும் அவர் தரும் விளக்கம் து.

விற்பனை வரிவசூல் ரூ 7,00,00,000

வியாபார வரிகள் மூலம் ரூ 1,00,00,000

மோட்டார் விற்பனை வரி ரூ 2,00,00,000

வருமான வரியில் மத்திய சர்க்கார் தரும் பங்கு ரூ 8,42,00,000

மேலே குறிப்பிட்டிருப்பதுபோல வரி முன்னைவிட அதிகமாக வசூலிக் கப்பட்டு, மதுவிலக்குச் சம்பந்தமாக ஏற்பட்ட நஷ்டம் சரி செய்யப்பட்டி ருக்கிறது.

கோபாலர் கூறுவது போல் மாகாண நிதி நிலை திருப்திகரமாக ஆகியிருக்கிறது. இத்திருப்தி யேற் படுவதற்குக் காரணமாக இருந்திருப் பது, அவர் கூறுவது போலவே, விற்பனை வரி, இந்த விற்பனை வரி, ஆலோசகர் ஆட்சிக் காலத்தி லும், இப்போதும் எப்படியிருக் கிறது என்பதை, அவர் தரும் பட் டியல் நமக்கு அறிவிக்கிறது. ஆலோ சகர் ஆட்சி (Adviser's Regim)க் காலத்தில் விற்பனை வரி வசூல் செய்யப்பட்டதையும், தற்போது "நம்ம" சர்க்கார் வசூல் செய்வதை யும் பாருங்கள்.

| | 1945—46 | 1948—49 |
|---|---|---|
| பொது விற்பனை வரி | ரூ 6 | ரூ 13 |
| ஏனைய துறைகளில் | ... | ரூ 1 |
| மோட்டார் விற்பனைவரி | 1 | ரூ 2 |

(கோடிக் கணக்கில்)

அட்வைசர் ஆட்சிக் காலத்தில், அதாவது அந்நியர் நம்மை ஆண்ட பொழுது, வசூலிக்கப்பட்ட விற் பனை வரித் தொகை ரூ 6 கோடி. இப்போது "நம்ம" சர்க்கார் வந்த பிறகு அதன் மூலம் வசூலிக்கப் படும் தொகை ரூ 13 கோடி. பிற வர்த்தக வரிகள் மூலமும் முன்பை விட, இப்போது ரூ 2 கோடி அதிக மாக வசூல் செய்யப்படுகிறது "நம்ம" சர்க்காரால். ஆகவே, இந்த அதிக வரி மூலம் கிடைக்கும் தொகை யான ரூ 9 கோடியோடு, மத்திய சர்க்காரிடமிருந்து வருமான வரி (Income - Tax) பங்காகக் கிடைக் கும் சுமார் $8\frac{1}{2}$ கோடியையும் சேர்த்து மொத்தம் $17\frac{1}{2}$ கோடி ரூபாய் சர்க் காருக்கு வருமானம், வருகிறது.

இதன் மூலம் மதுவிலக்கால் ஏற்பட்ட நஷ்டம் 13 கோடி ரூபாய் சரிக்கட்டப்பட்டு மேலும் 5 கோடி ரூபாய் மிச்சப்படுகிறது என்று அறிவிக்கிறார்.

அது மட்டுமல்ல, இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும்பொழுது ரூ 4 கோடி வருமானம் தரக்கூடிய புது வரிகளைத் தான் விதிக்க யோசித்திருந்ததாக வும், ஆனால் அந்தவரிகளை 'எதிர்ப்பு' காரணமாக கைவிட நேர்ந்தும்கூட, தேவைப்படும் எனத் தான் எதிர் பார்த்த 4 கோடி ரூபாயையும் விற் பனை வரியே தந்துவிடும் என்றும், அதற்கான சூசனைகள் தென்படுவ தாகவும் தெரிவித்திருக்கிறார்.

இந்த நான்கு கோடியைச் சரிக் கட்டக் கோபாலர் விதிக்க வேண்டு மென நினைத்திருந்த வரிகளில் இன்றியமையாதது பத்திரிகை விளம்பர வரியாகும். இந்த வரியும், இன்னும் சிலவும், எதிர்ப்புக் காரண மாக கைவிடப்பட்டும் கூட அதை யும் விற்பனை வரியே சமாளித்து விடும் என்று நம்ப இடமிருக்கிறது என்று கூறியுள்ளார்.

ஆகவே, விற்பனைவரி அட்வைசர் ஆட்சிக்காலத்தைவிட இப்போது 9-கோடி ரூபாய் அதிகமாகியிருக்கி றது. இன்னும் வளர்ந்து கொண்டி ருக்கிறது. கவலை தீர்க்கும் 'கற்பக விருட்சமாக' ஆட்சியாளருக்கு, விற் பனைவரி இருந்து வருகிறது.

* * *

விளையவிருந்த ஆபத்துக்கள் விற் பனைவரி மூலம், தடுக்கப்பட்டுவிட் டன என்று மார்தட்டிக் கொள்கி றார், மதிப்புக்குரிய கனம் மந்திரி யார். அட்வைசர் ஆட்சிக்காலத்தில் அவர்கள் செய்யாத ஒன்றை, பெருத்த நஷ்டம் தரக்கூடிய ஒன்றை, மதுவிலக்கை நாங்கள் அமுல் நடத்திவிட்டோம், அப்படியிருந்தும் வருமா

னம் குறையாமல் பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்று கூறுகிறார்.

மந்திரியாருக்கு, உண்மையில் இது மகிழ்ச்சி கொடுக்கக் கூடிய விஷயம்தான். மதுவிலக்கால் பறிபோகும் வருமான நஷ்டத்தை எப்படி ஈடுசெய்வது என்று கனவு கண்டு கிடந்தவர்களுக்கு, விற்பனை வரிமூலம் அதைச் சரிக்கட்ட முடிந்தது காண அகமகிழ்ச்சிதான் ஏற்படும்.

ஆனல் விற்பனைவரி, செலுத்தும் மக்களுக்கல்லவோ தெரியும் அவர்கள் படும் கஷ்ட நஷ்டங்கள். அந்நிய ஆதிபத்தியக் காலத்தைவிட இப்போது, அது முன்னைவிட இரண்டு மடங்குக்குமேல் அதிகமாகியிருக்கிறது. மாகாண சர்க்காருக்கு அதிகவருமானத்தைத் தேடித்தந்திருக்கிறது.

ஆனல், அவ்வளவு அதிகவரியையும் செலுத்தியவர்கள் மக்கள், வேறுயாருமல்ல. பிரமாதமான காரியத்தைச் சாதித்து விட்டது போலவும், இனியும் விற்பனை வரி மூலம் நிறையத் தொகைக்கிடைக்குமென்றும் பெருமை கொள்கிறாரே, அமைச்சர், அவருக்கு இது தெரியாததல்ல, விற்பனைவரி எங்கிருந்து வருகிறது, செலுத்தவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறவர்கள் யார் என்பதெல்லாம். இருந்தும் விற்பனை வரி மூலம் 'இவ்வளவு' தொகை வந்திருக்கிறது என்று பூரிப்படைகிறார்.

மாகாணத்துக்கென வருமானம் தரக்கூடியதாக இருக்கும் ஒரே ஒரு நல்ல 'இனம்' இந்தவிற்பனைவரிதான். ஆகவேதான், சர்க்கார், பட்ஜட்டில் பற்றாக்குறை ஏற்படுகிறது என்று தெரிந்ததும் விற்பனைவரியை அதிகமாக்கிக் கொள்ளுகிறது — நஷ்டத்தைச் சரிக்கட்ட வேறு வழி காண முடியாமல்.

புது வரிகள் போட்டு, 4-கோடி ரூபாய் வருமானம் தேடவேண்டுமெனத்தான் திட்டம் தீட்டியிருந்ததாகவும், ஆனல் அவைகளில் முக்கியமான சில எதிர்ப்புக் காரணமாக கைவிடும்படி நேர்ந்துவிட்டதாகவும் அறிவிக்கிறார். அதோடு, அந்தப்புது வரிகளில் கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தையும் விற்பனைவரியே சரிகட்டிவிடுமாம். அதிக வருமானம் வருமென்பதற்கான அறிகுறிகள் தென்படுகிறதாம்!

புதுவரி விதிப்புச் செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தவைகளில் ஒன்று பத்திரிகைமீது விளம்பரவிதி விதிப்பது என்பதாகும். இந்த வரியை எப்படியும் விதிக்கத்தான் செய்வோம் என்று, பத்திரிகை ஆதிபத்தியம் எவ்வளவோ பயமுறுத்தியும் கோபாலரும் அவரது கூட்டுச் சகாக்களும் விடாப்பிடியாக இருந்தனர். விளம்பரங்கள்மூலம் ஏராளபணம் வருமானம் அடையும் பத்திரிகைகள்மீது வரி விதிப்பதுஎன்பது தான் இந்தப்பத்திரிகைவிளம்பரவரியின் கருத்தாகும். ஆனல் விடமாட்டோம், விட்டுவிடமுடியாது என்றெல்லாம் வீரமுழக்கங்கள் செய்த மாகாண மந்திரி சபையின் "மூக்கறுப்புவிழாவை" முனைந்து நின்று, சென்னை பத்திரிகாதிபத்தியம் செய்திருக்கிறது.

இந்தவாரம், சென்னை சர்க்கார், தாங்கள் உத்தேசித்திருந்த விளம்பரவரி மசோதாவைக் கைவிட்டு விட்டதென அறிவித்துவிட்டது.

வீரமுழக்கங்கள் வெற்றுக் கூச்சல்களாகிவிட்டன! சென்னை பத்திரிகாதிபத்யம், மத்திய சர்க்காரை வலியுறுத்தி அவர்களை வசப்படுத்தி, அவர்கள் மூலம் மாகாண சர்க்கார், தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு வழியாயிருக்கும் என்று கண்ட ஒரு ஏற்பாட்டைக் கைவிடும்படி செய்திருக்கிறது.

எண்ணம் ஈடேறவில்லை, அதற்கு இடைஞ்சலாக மத்திய சர்க்கார் இருக்கிறதுஎன்று அறியும் கோபாலரோ, குறையும் வருமானத்தை விற்பனை வரி ஈடு கட்டிவிடுமென்று கூறுகிறார்!

விற்பனைவரி வியாபாரிகளிடமிருந்துதான் வசூல் செய்யப்படுகிறதென்றாலும், இதன் மூலம் பாதிக்கப்படுபவர்கள் அவர்களல்ல, பொருள்களை வாங்கும்பொதுமக்கள்தான். பொது மக்கள் தரும் வரிதான், அட்வைசர் ஆட்சிக் காலத்தை விட அதிக வருமானம் வருகிறது என்று அகமகிழ்கிறாரே அமைச்சர், அது!

தங்களுக்கு வருமானம் தரத்தக்க வழியாக விற்பனை வரி இருக்கிறது என்ற காரணத்திற்காகஅதை மென்மேலும் அதிகப்படுத்திக்கொண்டே போகவும், அதை அதிகமாக்கிக் கொண்டே வருகிறது என்று அறிவிப்பதும்தானு அழகு! 'நம்ம' சர்க்கார் வந்தது, நமக்கு முன்பிருந்த வரிப்பளுவில் கொஞ்சம் குறைத்தது என்று பொதுமக்கள் தங்கள் கஷ்டத்திலிருந்து கொஞ்சம் விடுதலையடையும்படி செய்யவேண்டியது தானேமுறை!

அப்படியென்ன, வருமான நஷ்டத்தைச் சரிக்கட்ட வக்கு இல்லாமலா போய்விட்டது! வருமான வரியாக ரூ. 8 கோடி மத்திய சர்க்காரிடமிருந்து, மாகாணத்துக்குப் 'பங்கு' கிடைத்தது, என்று கூறுகிறாரே கனம் கோபாலர், அந்தஎட்டுக்கோடியும், மாகாணம் செலுத்திய மொத்தத் தொகையில் எத்தனை சதவிகிதம்? நூற்றுக்கு பதினேழுதானே! 17% பங்கே, எட்டுக்கோடி ரூபாய் நமக்குத் தந்திருக்கிறது. அதுவும் விற்பனை வரி மூலம் எவ்வளவு அதிக வருமானம் வந்ததோ அதற்குச் சமமாகக் கிடைத்திருக்கிறதென்றால், நாம் கொடுக்கும் அவ்வளவு வருமான வரியும் இங்கேயே தங்கினல் எவ்வளவு வருமானம் நமக்கு ஏற்பட முடியும்! கோடிக் கணக்கில் பணம் கிடைக்குமே!

அது முழுமையும் அப்படியே, மத்திய சர்க்காரின் கஜானவில் கொட்டிவிட்டு, 'ஒரு வரி' இருக்கிறது தங்கள் கைவசம் என்பதற்காக அதன் மூலம் சுரண்டுவது தானு முறை!

நிதி நிலைமை சரியாக இருக்கிறது என்று திருப்தியடைகிறார். திருப்தி அவருக்கு, ஆனல் நமக்கு?

## அவர் செலவு!

பண்டித நேரு அமெரிக்கச் சுற்றுப் பயணம் முடித்துத்திரும்பிவிட்டார். அவருக்கு, அமெரிக்காவில் ஏற்பட்ட சுற்றுப் பயணச் செலவு என்ன தெரியுமோ? 130 டாலர்கள். அதாவது ரூ 617—8—0! ஒரு மாதத்துக்கோ, ஒரு நாளைக்கோ அல்ல இந்தச் செலவு! ஒரே ஒரு மணி நேரத்திற்கு ரூ 617—8—0! பண்டித நேருவுக்குத் தனிப்பட்ட ஸ்தாபனங்கள் அளித்த வரவேற்பு, விருந்து ஆகியவைகளின் செலவு நீக்கி ஆகியிருக்கும் செலவாம் இது! இவ்வளவு தொகையை, அமெரிக்காவில் செலவழித்திருக்கிறது "ஏழை" நாட்டின் பிரதமருக்கு என்றால், அதி... அர்த்தமில்லாமலா இருக்கும்!

# ★ அடிமை அடிப்பீடம் ★

"ஒரு நாட்டை அடிமை கோள் ச் சுலபமான வழி, அந்நாட்டு மக்க ன் பாஷையை ஒழித்துவிட்டு று பாஷையை அவர்கள்மீது ணிப்பதே."

சென்னையில் நடைபெற்ற தமிழக லை மாநாட்டில் இவ்வண்ணம் றியுள்ளார் கோவைச் சீமான் . கே. சண்முகம். நம்முடைய ல், அவருடைய இதயத்தி ருந்து எழுந்து வந்திருக்கிறது. வர், சுயமரியாதைக்காரரோ, திரா முன்னேற்றக் கழகத்தைச் ர்ந்தவரோ அல்ல. காங்கிரஸ் காமில் கைகுலுக்குபவர், எட்ட டியாத இடமான இந்திய மந்திரி பையிலேயேபொறுப்புள்ளமந்திரிப் வி வகித்தவர். இன்றும், அவரு ய தொடர்பு அரசாங்கத்துக் ம், அரசாங்கத்தின் தொடர்பு வருக்கும் நிறைய உண்டு—எல்லா கிளிலும். அவர் கூறியிருக்கிறார், ம் இதுவரை கூறிவருவதை ஒரு ட்டை, அடிமைகொள்ள வேண்டு னுல், அந்நாட்டு மக்களின் ாழியை ஒன்றுக்கும் இலாயக் றதாக்கிவிட்டால், அந்நாடு அடி ப்பட வேண்டியதுதான், என்று த்துக் கூறுகிறார், தமிழகப் பிரி ன குறித்துப்பேச வந்தபொழுது.

அடிமை கொள்ளும் வழி!

மொழியை அழிப்பதுதான்!

தங்கள் மொழியை திணிப்பதே!

று விளக்கமாகக் கூறுகிறார், திய சர்க்கார், 15 ஆண்டுகளுக்கு கிலம் இருக்கும் என்றும், அதற் பிறகு இந்தி அரசியல் மொழி விடும் என்றும் செய்திருக்கும் மானத்தை எடுத்துக் காட்டி, இடைக் காலத்திற்குள் ஆங்கி துக்கிருக்கும் செல்வாக்குப்படிப் பாக அகற்றப்பட்டு கொஞ்சம் ஞ்சமாக இந்தி மொழி திணிக் பட்டுவிடும், அதன் பிறகு நாம் மூடி மௌனியாகி, எதற்கும் க்கற்றவர்களாக வேண்டியது தான் என்று விளக்கமாகச் சொல்கிறார், முன்னாள் இந்திய மந்திரி சண்முகம்!

அப்படி, நாட்டின் மொழியை அடிமைபடுத்தி அதன்மூலம் நம் நாட்டையும் அடிமைப் படுத்தவே வடநாட்டு ஆதிபத்தியம், முயல்கிறது. ஆகவே, அதை எதிர்ப் போம் என்று நாம் கூறிவருகிறோம். சண்முகம் காட்டுகிறார், மொழியை அடிமைப்படுத்திவிட்டு அதன் மூலம் நாட்டையும் மீளா அடிமையில் ஆக்க வேண்டும் என்ற இலட்சியத்தின் பேரிலேயே, மத்யசர்க்கார் முயலுகி றது—மொழிவாரி மாகாணப் பிரிவி னையை ஒத்திப்போட்டுப்பார்க்கிறது என்று வெளிப்படையாகக் கூறுகி றார்.

நாமும் இதைத்தான் கூறிவருகி றோம், நமது இலட்சிய கீதத்தின் அடிப்படை கூட இதுதான் என்று சொல்லுகிறோம். ஆனால் இப்போது அதே வார்த்தைகளைச் சொல்பவர், ஆர். கே. சண்முகம், மத்திய சர்க்கா ரில் மந்திரியாயிருந்தவர். நாம், எந்த வடநாட்டுத் தலைவர்களுடனும் பழ கியதில்லை, தொடர்புகொண்டதில்லை. ஆனால், அவரோ, நேற்று வரை நெருங்கி உறவாடியவர், இன்றும் இடையறு நட்புரிமையுடன் பழகுப வர், எனவே அவர்சொல்வதில் அனு பவ உண்மை இருக்க முடியும்—இருக்கவேண்டும்—என்ற எண்ணத் தின் மீதே, அவரது கூற்றை நாம் இவ்வளவு தூரம் வலிமையுள்ள தாகக்கருதுகிறோம்.

*  *  *

'இந்திமொழி வேண்டாம்' என்று நாம் கூறுவதன் நோக்கமே, அது எங்கோ பேசப்படும்மொழி, அதைத் தீண்டினாலே தீட்டு ஒட்டிக்கொள் ளும், தொட்டாலே விரல் வெந்து விடும் என்ற எண்ணத்தால் அல்ல! அதுவும், உலக மொழிகளைப்போல ஒன்றாகத்தான் நம் கண்களுக்குப் படுகிறது! மக்களில் ஒருபிரிவினர் பேசும்மொழி என்ற அளவில் அதற்கு நாம் மதிப்பளிக்கவோ, போற்றவோ தயங்கவில்லை! அந்த மொழியை, வயதுவந்த நம் நாட்டு மக்கள் கற்றுத் தெரிந்துகொள்வது பற்றியும் நமக்கு ஆத்திரமோ, ஆயாசமோ கிடையாது.

உலகில் பிறந்த மனிதன் சாகும் வரை உலகிலுள்ள எல்லா வித மான துறைகளையும் அறிந்து கொள்ளத்தான் வேண்டும்! அறிவு வேட்கை கொண்டோர் 'போது மென்ற மனமே பொன்செய்யும் மருந்து' என்று இருக்கவேண்டும் என்று எண்ணத்திலும் எண்ணுப வரல்ல நாம்! சென்றுஎட்டுத்'திசை' யெங்கும் சுற்றி, செல்வமதாம் அறிவை கொணர்ந்தீங்கு சேர்ப்பீர் என்பதுதான் நமது போதனை—நமது வருங்காலச் சந்ததிகளுக்கு.

பிரெஞ்சைக் கற்கட்டும், லத்தீனை அறியட்டும், ரஷ்யமொழிகளைப் பயிலட்டும், ஜெர்மனியைப் பெறட்டும், ஜப்பானிய மொழியை சீனப் பேச்சை, பர்மிய பாஷையை அறிந்து நமது உடன்பிறந்தார்கள் துள்ளித் திரிந்து வாழ்வதில் நமக்கு மகிழ்ச்சி ஏற்படாமலா இருக்கும்! இருப்பதை மட்டும் வைத்துக் கொண்டு, அதன் பெருமை பேசிக் கொண்டு கிட என்று சொல்ல நாம் 'கற்'காலப் பிறவிகளல்லவே! புது உலகம் காணும் புதுவேக உணர்ச்சி முனைப்புகளாயிற்றே!!

பல்கலையும் பல்மொழியும் பயின் றுணர்ந்து, நம்மைச் சார்ந்தோர், பறவைகளாகப் பறந்து திரிவதைக் காணப் பதறும் உள்ளம் கொண்ட வர்களல்லவே நாம்! ஆனால் நாம் சொல்வது, அறிவு பெருகட்டும், ஆனால் அதைப்போதை ஆட்படுத் தாமல் இருக்கட்டும் என்பதுதான். கல்லூரியில வணிகத்துறைக் கல்வி (B. Com) கற்பவர்கள் பிரெஞ்சு கற் கிறார்கள், சில இடங்களில் இந்தி கற்கிறார்கள், அது கூடாது என்றோ, வேண்டாமென்றோ, நாம் தடுக்கவோ மறியல் செய்யவோ இல்லையே!

ஆனால், இந்தியை வேண் டாமென்கிறோம் — இளம்வயதில், அதன்வார்த்தைகளை உச்சரிக்கவும் தெரியாத சின்னஞ்சிறார்களை அவ திக்குள்ளாக்கவேண்டாம், அவர்கள் வருங்கால நட்சத்திரங்கள், இப்

(11-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 13—11—49 [காஞ்சி

# இலட்சிய கீதம்

## விளக்கம் 2.

அண்மையில் சென்னையில் தோழர் ஆர். கே. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தமிழக எல்லை மாநாட்டில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றிய திரு. வி. கலியாணசுந்தரனர் அவர்கள்,

> "தமிழ் நாட்டின் எல்லையைச் சுருக்கிக் கொண்டே போவது மூளையைச் சுருக்குவதேயாகும். தமிழ்நாட்டைப் பெரிதாகவைத்திருப்பது நாட்டிற்கும், உலகிற்கும் நல்லது"

என்று குறிப்பிட்டுப் பேசியுள்ளார். மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப் படவேண்டுமென்ற அடிப்படையில் கூட்டப்பெற்ற தமிழக எல்லை மாநாட்டில், தமிழ்நாட்டின் எல்லையைச் சுருக்காமல், பெரிதாகவும் விரிவாகவும் வைத்துக்கொள்வதுதான் நாட்டிற்கும், உலகுக்கும் நல்லது என்று பேசியது மாநாட்டு நோக்கத்தின் அடிப்படைக்கே முரணானது என்று சிலர் நினைக்கக் கூடும் என்பதற்காகவே, அதுபற்றிய சில குறிப்புக்களை இங்கு எழுத விரும்புகிறோம்.

தமிழ்நாடு என்று இப்போது அழைக்கப்படும் சுருங்கிய இடமல்ல பழைய தமிழ்நாடு. தமிழ்மொழியின் குழந்தைகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய மொழிகள் பிறப்பதற்குமுன், தமிழ் நாடு விரிந்தும் பரந்தும் இருந்தது. தமிழ்மொழி ஒன்றுதான் அன்றைய தமிழகத்தின் தனி மொழியாக இருந்தது. மொழியின் பெயரையே நாட்டின் பெயராகவைத்து வழங்கிய பெருமை தமிழர்களுக்கே உரியதாகும்.

அன்று, விரிந்தும் பரந்தும் இருந்த தமிழகம், இன்று மிக மிகச் சுருங்கிய அளவுக்கு வந்து விட்டது —வரும்படி செய்யப்பட்டு விட்டது. அன்று தமிழ்நாட்டுக்கு இருந்த எல்லைவேறு; இன்று இருப்பது வேறு. அன்றிருந்த எல்லையை இன்று காணமுடியாது—பெறமுடியாது என்றபோதிலும், அதன் எல்லையை, அது, இருக்கவேண்டிய அளவைவிடச் சுருக்குவது கூடாது என்பதனையே திரு. வி. க. அவர்களின் சொற்பொழிவு எடுத்துக்காட்டுகிறது.

நாட்டிற்கும் உலகுக்கும் நலம் பயக்கக் கூடிய முறையில் தமிழகத்தின் எல்லை அமையவேண்டுமென்று திரு. வி. க. அவர்கள் கூறுவதன் உட்பொருள் என்ன என்பதை உணரவேண்டும். ஒருநாட்டுக்கு ஒரு எல்லையை ஏற்படுத்துவதற்கு முன், அந்த நாடு இன்று இருக்கும் நிலைமையை நன்கெண்ணிப்பார்த்து அதற்கேற்ப அந்த நாட்டின் எல்லையை அமைக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் நாட்டுக்கு நலம் பயக்கக்கூடிய காரியங்களைத் தங்கு தடையின்றிச் செய்ய முடியும். அங்ஙனமன்றிப், பெயரளவில் மட்டும் ஏதோ ஒரு எல்லையை வகுப்பதும், நாட்டைப் பிரிப்பதும் உண்மையிலேயே நாட்டுக்கு நன்மை தருவதாகாது.

இந்தியா, வெள்ளையர் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுச் சுதந்தரமடைந்து விட்டதென்று கூறிப் பெருமைப் படுவதற்கன்றி, வேறு என்னவிதமான நன்மையை நாம் இந்தச் சுதந்தரத்தால் அடைந்துவிட்டோம்? அன்று 'அவர்கள்' ஆண்டார்கள்—இன்று 'இவர்கள்' ஆளுகிறார்கள் என்றநிலைமையிலேயேதான்நாம்இன்னும்இருக்கிறோம். நம்மை எவர்களும் ஆளாமல், நம்மை நாமே ஆளும் நிலைமைக்குத்தான் சுதந்தரம், விடுதலை என்று பொருளேயன்றி, ஒருவர் ஆளவும், மற்றவர் ஆளப்படவுமான நிலைமைக்குச் சுதந்தரம் என்ற பெயர் ஒருபோதும் பொருந்தாது. ஆளுபவர்கள் மாறுவதால் ஒரு நாடு சுதந்தரமடைந்து விட்டதாகக்கருதி விடக் கூடாது. நம்மை அடிமைப் படுத்தி ஆண்டுகொண்டிருந்த அந்நிய அரசாங்கம் நம்மைவிட்டு அகன்று விட்டதென்ற மகிழ்ச்சியில் நாம் நம்முடைய உரிமைகளை மறந்து விடக்கூடாது.

ஆங்கிலேயர் இந்நாட்டை ஆளத் தொடங்கியதற்கு முன்னர், இப் பரந்த உபகண்டம் எப்படி இரு[ந்]ததோ அந்த நிலைமையை மீண்டு[ம்] அடைவதுதான் சுதந்தரமாகும். அங்ஙனமின்றி, ஆங்கிலேயர் ஆண்ட முறையைப் பின்பற்றி, ஆட்சிபுரிய நினைப்பது, "அவனுக்குப்பதில் நான் ஆளுகிறேன், அவனுக்கு அடங்கி இருந்தது போல் எனக்கும் அடங்கி இருங்கள்" என்று கூறுவதைச் சுதந்தரம் என்றால் என்ன என்ப[த]ன் பொருளை உணர்ந்த யார்தான் ஒப்புக்கொள்ளமுடியும்?

ஆங்கிலேயன் இங்குஅடியெடுத்து வைப்பதற்கு முன், இவ்வுபகண்டம் ஒரு தனிப்பட்ட ஆட்சியின் கீழ் இருந்ததில்லை என்பதை வரலாறு[க]கள் கூறுகின்றன.

மொழி, கலை, கலாச்சாரம் ஆகிய நற்பண்புகளின் அடிப்படையில் இவ்வுபகண்டம் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து, தனித்தனி சுயேச்சை நாடுகளாக—வளமாக—வசதிகளோடுதான் இருந்தன. அந்த நிலை ஆங்கிலேயனால் மாற்றப்பட்டு, அனைவரும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டு, அவனுடைய சுகபோக வாழ்வுக்குச் சுரண்டும் முறையில் ஆட்சிமுறையை அமைத்துக் கொண்டான். அதனால் நன்மை அடைந்தவன் ஆங்கிலேயனேயன்றி நாமல்ல என்ற காரணத்தால்தான் அவனுடைய ஆட்சியை நாம் விரும்பாமல், 'விடுதலைப் போர்' நடத்தினோம். அதில் வெற்றியும் பெற்று விட்டோம்.

இப்போது, "அவன் போய்விட்டான்;நான் வந்துவிட்டேன்; அவனுக்குக் கொடுத்த உன்னுடைய உழைப்பின் பயனை எல்லாம் என்னிடம் கொடுத்து விடு" என்று கூறுவதை யார்தான் ஒப்புக்கொள்வார்கள்?

எனவேதான் ஆங்கிலேயன் காலத்தில் உண்டாகாதபிரிவினைக்கிளர்ச்சி இன்று பெரும் அளவில் உண்டாகியிருக்கிறது. அதிலும் பொருளாதாரத் துறையில் மிகவும் பிற்போக்கான நிலையை அடைந்துள்ள நாடுகள் ஒவ்வொன்றும், தாம் தாம் பிரிந்து வாழ்ந்தாலன்றிப் பொருளாதார முன்னேற்றம் அடைய முடியாதென்பதை நன்குணர்ந்துள்ளன.

மொழிவழி நாடு பிரிக்கப்பட வேண்டுமென்றும், இனவழி நாடு அமையவேண்டுமென்றும்,பொருளா

முறையில் பிரிந்துவாழவேண்டு
ன்றும், அவரவர்களும் தாங்
அடைந்துள்ள தொல்லைகளுக்
ப்ப் பிரிவினையின் அவசியத்தை
புறுத்துகின்றனர். எப்படியோ
று, நாடு பிரிந்தால் அதுவே
தும் என்ற அளவுக்கு ஒவ்வொ
ரும் தத்தம் கருத்துக்களை
ளிப்படையாகவே கூறி ஒரு
வு காணவேண்டுமென்ற நிலை
க்கு வந்துள்ளனர்.

அந்நியனால் அடிமைப்படுத்தப்
டுக்கிடந்த மக்களை மீட்டவர்கள்,
ண்டும் அவர்களை அடிமைப்படுத்த
ட்டார்கள் என்ற நம்பிக்கையோடு
வொருவரும் சுதந்தரமாக வாழ
ண்டுமென்று விரும்புகின்றனர்—
தற்கான வழிவகைகளைச் செய்து
வார்கள் என்று எதிர்பார்க்கின்
ர்.

இனவழி நாடு பிரிய வேண்டு
ன்று கிளர்ச்சி செய்த முஸ்லிம்
ழர்கள் தங்களுடைய பிரசா
தை இடைவிடாது செய்ததன்
ஞக, அவர்கள் எதிர்பார்த்த
ல அளவுக்கு முன்னரே தங்
கோரிக்கையில் வெற்றி பெற்று
ட்டனர்—இப்போது தனி இராச்
ம் அமைத்துக்கொண்டு சுகமாக
ழ்கின்றனர்.

மொழிவழி நாடு பிரிக்கப்பட
ண்டுமென்று கிளர்ச்சி செய்பவர்
, தங்கள் பிரசாரத்தை யாதுகார
த்தாலோ இடையிடையே தளர
டு வந்ததால், மொத்தத்தில் நாடு
ந்திரம் அடைந்துவிட்டதென்று
றிக்கொண்டபோதிலும், உடனடி
க அவர்களுடைய அடிப்படைக்
ாள்கையில் சுதந்தரம் அடைய
டியாமல் போய்விட்டது.

அந்நியனை விரட்ட ஆர்வத்தோடு
த்துழைக்கும்படி நாட்டு மக்களை
ழைத்தவர்கள், மொழிவழிமாகா
ங்கள் பிரிக்கப்படும் என்ற உறுதி
ாழியைக்கூறியே அழைத்தனர்.
னல், அந்நியனை விரட்டி ஆண்டு
ரண்டாகியும், அவர்கள் தங்கள்
க்குறுதியை இன்னும்நிறைவேற்ற
ன்வரவில்லையே என்ற எண்ண
ம், அது குறித்த சந்தேகமும்,
ளுக்குநாள் வளரவேதான், இப்
ாது மொழிவழி மாகாணங்கள்
க்கப்பட்டாக வேண்டுமென்று
புறுத்தவும், அது குறித்து
ாடுகள் கூட்டித் தீர்மானங்கள்

நிறைவேற்றவும் முனைந்துள்ளனர். புதிய அரசியல் அமைப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே மொழிவழிமாகாணப் பிரிவினையின் வேலைகள் முடிவடைந்துவிட வேண்டுமென்று சென்னையில் நடைபெற்ற தமிழக எல்லைமாநாட்டில் தீர்மானமும் நிறைவேற்றியுள்ளனர்.

மொழிவழி மாகாணங்கள் பிரிய வேண்டுமென்று கூறுபவர்களுக்கும் திராவிடநாடு திராவிடர்க்கே ஆக வேண்டுமென்று கூறும் நமக்கும் இடையே பெருத்த அளவில் வேறுபாடு இல்லையென்றபோதிலும், நமக்கும் அவர்களுக்குமிடையே சிற்சில வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன.

நாம், திராவிடநாடு திராவிடர்க்கே என்று கூறுவது, பொருளாதார முன்னேற்றத்தை முதல் திட்டமாகவும், சமுதாய முன்னேற்றத்தை அதற்கடுத்த திட்டமாகவும் கொண்டு, காலாச்சார முறையில்—அன்று ஒன்றாக வாழ்ந்த அனைவரும் மீண்டும் ஒன்றுகூடி வாழவேண்டுமென்பதேயாகும். இடையில் வந்து நம்மோடு வாழும் மக்களும், நம்முடைய மொழி, கலை, நாகரிகம் ஆகியவற்றை மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு அதன்படி தங்கள் வாழ்க்கையை நடத்தச் சம்மதிப்பார்களானால், அவர்களும் நம்மோடு வாழத் தடையொன்றும் இல்லை என்பதும் திராவிட நாடு திராவிடர்க்கே என்னும் அமைப்பில் அடங்கியுள்ளது.

நம்முடைய பண்டைய நாகரிகம் அழிக்கப்படாமலும், கலை கொலை செய்யப்படாமலும், மொழி பின்னப்படுத்தப்படாமலும், பொருளாதாரம் நசுக்கப்படாமலும் இருப்பதற்காகவே திராவிடநாடு திராவிடர்க்கே ஆகவேண்டுமென்று கூறுகின்றோம்.

திராவிடநாடு தனியரசாக அமைய வேண்டுமென்று நாம் கூறுவதற்கும், மொழி வழி மாகாணங்கள் பிரிய வேண்டுமென்று கூறுவதற்கும் இடையே உள்ள வேறுபாடுகளில் முக்கியமானது வடநாட்டுத் தொடர்பு பற்றியதாகும். அதாவது, மொழி வழி மாகாணங்கள் பிரிய வேண்டுமென்று கூறுபவர்கள், அந்தந்த மாகாணங்களை அந்தந்த மாகாணத்தவர்களே நிர்வகித்துச் சகல காரியங்களையும் நடத்துவது

என்ற போதிலும், குறிப்பிட்ட சில தொடர்புகள் மத்திய சர்க்காருக்கும் மாகாண சர்க்காருக்கும் இருக்கவேண்டுமென்ற அடிப்படையின்மீதே மொழி வழி மாகாணங்கள் அமையவேண்டும் என்பதற்கு இணங்குகிறார்கள்.

ஆனால், திராவிடநாடு தனியாகப் பிரிய வேண்டுமென்று கூறும் நாம் இந்தக் கருத்துக்கு முற்றிலும் மாறுபட்டவர்களாக இருக்கிறோம். நிர்வாகத் துறையில் மத்திய சர்க்கார் நம்மை ஆட்டிப் படைப்பதையோ, நாம் அவர்களுக்கு அடங்கி நடப்பதையோ திராவிடத் தனி அரசு ஒருபோதும் விரும்பாது—ஏற்றுக் கொள்ளாது. நட்பு முறையில் நமக்கும் அவர்களுக்கும் தொடர்பு இருக்க முடியுமேயன்றி, அதிகார முறையில், அவர்கள் கட்டளையை நாம் ஏற்றுக் கொள்வதோ, நம்முடைய கட்டளையை அவர்கள் ஏற்றுக் கொள்வதோ கூடாது. நமக்கும் அவர்களுக்கும் வியாபாரத் தொடர்பு, போக்குவரத்துத் தொடர்பு ஆகிய சில முக்கிய தொடர்புகள் போதிய—தக்க நிபந்தனையின் பேரில் இருக்கலாமேயன்றி, நாமோ அவர்களோ ஒரு பொருளை வலுக்கட்டாயமாக—அதிகார பூர்வமாக வாங்கவோ, விற்கவோ கூடிய நிபந்தனையின்மீது தொடர்பு இருக்கக்கூடாதென்பதே நமது நோக்கமாகும். நமக்குத் தேவையானதொன்று அவர்களிடமிருந்தாலும், அவர்களுக்குத் தேவையானதொன்று நம்மிடமிருந்தாலும், இரு சாரார்களுடையதேவை போக எஞ்சியிருப்பதை நாம் அவர்களுக்கும், அவர்கள் நமக்கும் கொடுப்பதை மனிதாபிமான. நட்பு முறையில், நியாயமான ஊதியத்துடன் பரிமாறிக் கொள்வதில் நாமும் அவர்களும் கலந்துறவாடலாம் என்பதும் நமது கொள்கையாகும்.

மொழிவழி மாகாணங்களைப் பிரிப்பதற்கு மத்திய சர்க்கார் இப்போது இணங்கியிருக்கிறதென்றால், அது, மாகாணங்களுக்குச் சுதந்தரம் வழங்குவதென்று பொருளல்ல. மத்திய சர்க்காரிடம் குவிந்துகிடக்கும் நிர்வாகப் பொறுப்புகள் சிலவற்றை மாகாணங்களுக்குப் பகிர்ந்து கொடுத்து மாகாணங்களிடம் வேலை

வாங்குவதென்பதேயாகும். மத்திய சர்க்காரின் நிர்வாக வசதிக்காக மாகாணங்கள் பிரிக்கப்படுகின்றனவேயன்றி, மாகாணங்களுக்குப் பூரண சுதந்தரம் கொடுப்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்படவில்லை. மொழிவழி பிரிக்கப்படும் மாகாணங்களின்வருவாயில் ஒருபகுதி கட்டாயம் மத்தியசர்க்காருக்குக் கொடுக்கப்படவேண்டுமென்ற நிபந்தனையின் பேரில்தான் மொழிவழி மாகாணங்கள் பிரிக்கப்படுகின்றன. ஒருமாகாணத்தின் வருவாய் அந்த மாகாண நிர்வாகத்துக்கே போதவில்லை என்றபோதிலும், மத்திய சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய பங்கைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும்.

ஆனால், நம்முடைய திட்டத்தின்படி, திராவிடநாடு தனியாகப் பிரிக்கப்படும் ஆட்சியில், மத்திய சர்க்கார் தலையிடமுடியாது. எதுவேண்டுமானாலும், நம்மைக்கேட்டு, நாமாகக் கொடுத்தாலன்றித், தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி எதனையும் பெற்றுவிட முடியாது. உதாரணமாக, நம்மிடம் நம்முடைய தேவை போக மிச்சமாகப் பணம் இருந்து, மத்திய சர்க்காரின் தேவைக்கே பணம்போதாமல் இருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். அப்போது நம்மிடம் எஞ்சியுள்ள பணத்தை அந்தச் சர்க்காருக்கு, இப்போது அமெரிக்கா கடன் கொடுப்பது போல் கடனாகக் கொடுத்து வாங்கும் முறையைத்தான் நாமும் கைக்கொள்வோம். நமக்குப் பணம் தேவையாய் இருந்தாலும் இதே முறையில்தான் அவர்களிடம் வாங்குவோம்.

மொழிவழி மாகாணங்களைப் பிரிக்க வேண்டுமென்று கூறுபவர்கள் இத்தகைய ஏற்பாடுகளுக்கு மாறுபட்டவர்களாய் இருப்பதால்தான், நமக்கும் அவர்களுக்கும் சிற்சில வேறுபாடுகள்—ஒத்துப் போக முடியாத முறையில் உள்ளன என்று கூறுகிறோம். நாம்கூறும் இத்தகைய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுதான் தமிழக எல்லை மாநாட்டில் பேசிய திரு. வி. க. அவர்கள், தமிழ் நாட்டின் எல்லையைச் சுருக்கிக்கோள்வது மூளையைச் சுருக்கிக் கோள்வதாகும்" என்று கூறியுள்ளார்.

இன்றுள்ள நிலையில், தமிழகம் இப்போதுள்ள அளவோடு சுருங்கியிருந்தால், அதனால், நாட்டுக்கும், உலகுக்கும் நன்மை ஏற்படாதென்றும் அவர் தம்முடைய உரையில் குறிப்பிட்டுப் பேசியுள்ளார். அதாவது, தமிழகம் பண்டைய நிலையைப் பெற்று விரிவாகவும் பெரிதாகவும் அமைய வேண்டுமென்பதே திரு. வி. க. அவர்களின் உரையில் அடங்கியிருக்கும் உண்மையாகும்.

ஒரு குலம், ஒரு கலை, ஒரு நாகரிகம் ஆகிய பண்புகளோடு வாழ்ந்த ஒரு இன மக்கள், ஆந்திரர் என்றும், கன்னடர் என்றும், கேரளர் என்றும் பிரிந்து பிளவுபட்டு வாழ்வது அரசியல்-சமுதாய—பொருளாதார முன்னேற்றத்துக்கு வழிகோலுவதாகாது என்பதை அவர் நன்குணர்ந்ததால்தான், தமிழகத்தின் எல்லையைச் சுருக்காமல் விரிவுடையதாகச் செய்யவேண்டுமென்றும், அங்ஙனம் செய்யத்தவறினால். தமழ்மக்கள் தங்கள் நாட்டின் எல்லையைச் சுருக்குவதன் வாயிலாகத் தங்கள் அறிவையே சுருக்கிக் கொண்டவர்களாகின்றார்கள் என்று சூட்சமமாகப் பேசியுள்ளார்,

இக்கருத்து அவருக்கில்லையென்றால், தமிழக எல்லை மாநாட்டில் 'சுருக்கம்', 'விரிவு' பற்றிப் பேசியிருக்கமாட்டார். தமிழக எல்லை 'எது' என்று எல்லை மாநாட்டினரால் குறிப்பிட்டதையே அவரும் ஆதரித்துப் பேசிவிட்டுச் சென்றிருப்பார். அங்ஙனமன்றி, இப்போது தமிழகத்தின் எல்லையென்று குறிப்பிட்டிருப்பது, உண்மையாகவே தமிழகத்தின் எல்லையாகாது, அதனை இன்னும் விரிபடுத்தவேண்டுமென்ற பொருளில் ஏன் பேசவேண்டும்?

மேலும், திரு. வி. க. அவர்கள்,

> இதுவரை நிலைமை எப்படி இருப்பினும், இனி ஒன்றுபட வேண்டும். எல்லோரும் தமிழர்கள், ஒரே இனம், ஒரே குலத்தவர் என்ற உணர்ச்சி ஏற்படவேண்டும்"

என்று பேசியுள்ளார். இதன் பொருள் என்ன? இதுவரைநிலைமை எப்படியிருந்த போதிலும், இனி மேலாவது நாட்டின் நன்மையை உத்தேசித்து எல்லோரும் ஒன்று கூடுங்கள் என்று அழைக்கிறார். எல்லோரும் தமிழர்கள், ஒரே இனம், ஒரே குலம் என்று கூறுகிறார். தமிழ்மக்களைப் பார்த்து, "நீங்கள் எல்லாரும் தமிழ் மக்கள்தான்" என்று எந்தப் பைத்யகாரனும் கூறமாட்டான். ஒரு காலத்தில், தமிழ் மக்களாக இருந்த நீங்கள் இப்போது பிரிந்து பிளவு பட்டு வேறு வேறு பெயர் வைத்துக் கொண்டு, ஆந்திரர் என்றும், கேரளர் என்றும் கன்னடர் என்றும் பிரிந்திருந்த போதிலும், நீங்கள் எல்லோரும் தமிழ் மக்களின் வழி வந்தவர்கள்தான், எனவே, ஒன்றுபடுங்கள்! இன உணர்ச்சியோடு வாழுங்கள்! தமிழக எல்லையைச் சுருக்கி உங்கள் அறிவைச் சுருக்கிக் கொள்ளாதீர்கள்! அரசியல், சமுதாயம், பொருளாதாரம் ஆகியவற்றில் முன்னேற்றமடைய வேண்டுமானால் பண்டைய பண்பை மறவாமல், ஒன்றுபடுங்கள்! யாருக்கும் அடிமையாக வாழும் மனப்பான்மையை விட்டொழியுங்கள் என்று கேட்டுக்கொள்கிறார்.

ஒரு காலத்தில் ஒரு மொழியையே பேசும் மக்களாக இருந்தவர்கள், இன்று பலமொழிகளைப் பேசுவோராகமாறிவிட்டதால்தான், திரு. வி. க. அவர்கள் பேசும்போது, மொழியைப் பற்றிக் குறிப்பிடாமல், இனம், குலம், நாகரிகம் ஆகியவற்றைக் குறிப்பிட்டே, ஒன்று சேரும்படி அழைக்கிறார். தெலுங்கு பேசுவோரும், மலையாளம் பேசுவோரும், கன்னடம் பேசுவோரும், மொழி வழக்கில் வேறுபட்டாலும், இனத்தில், குலத்தில், நாகரிகத்தில், கலாச்சாரத்தில் வேறுபட்டவர்களல்ல என்பதால்தான், "நீங்கள் எல்லோரும் தமிழர்கள்" என்று கூறியுள்ளார்.

திரு. வி. க. அவர்கள் கூறும் இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் திராவிடநாடு திராவிடர்க்கே ஆகவேண்டும் என்பதும். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு ஆகிய மொழிகளைப் பேசும் மக்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு அரசியல்—வடநாட்டுத் தொடர்பற்ற முறையில் அமையவேண்டுமென்பதே நம்முடைய விருப்பமாகும். அப்பொழுது தான் நாம் அரசியலிலும், சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும், அடிமைபட்டு, இழிவுபடுத்தப்பட்டு, நசுக்கப்பட்டு அவதியுறு

முன்னேற முடியும் என்று றுகிறோம்.

திராவிடநாடு திராவிடருக்கே ற நிலை ஏற்பட்டுவிட்டால், மத் சர்க்கார், மாகாணசர்க்கார் என்ற மாறித், திராவிட சர்க்கார், லிசர்க்கார் அல்லது வடநாட்டுச் க்கார் என்ற நிலை ஏற்படும். அந்த ஏற்படும் போது கூட நமக்கும் நாட்டுக்கும் உள்ள நட்புரிமை சிறிதும் பாதிக்கப்படாது. எந் காரணத்தைக்கொண்டும் நாம் ர்களுக்கு எதிரிகளாகவோ, அவர் நமக்கு எதிரிகளாகவோ இருக்க டியாது. இவ்வுபகண்டத்துக்கு ாயினும் ஆபத்து வெளிநாடுகளி ந்து வருமாயின், அப்போது மும் அவர்களும் ஒன்றுசேர்ந்து ளியாரை விரட்டியடிப்பதில் டு முன்னணி அமைத்துக் ள்வோம்—வெற்றி பெறுவோம்.

ஆனால், ஒருவரை ஒருவர் க்கி ஆளவேண்டும், ஒருவர் ழைப்பால இன்னொருவர் வாழ ண்டும், ஒரு மொழியை இன் ரு மொழியால் நசுக்கவேண்டும், வர் நாகரிகத்தை இன்னொருவர் ற்கொள்ள வேண்டும், என்ற னபிற அழிவு வேலைகளில் ஈடு டு நம்மை நாமே பகைத்துக் ள்ளாமல், அவரவர்களின் உரி களை அவரவர்களுக்குக் டுத்து நட்பு முறையில் சகோத ளாக வாழவேண்டுமென்பதே விட நாடு திராவிடர்க்கு ஆக ண்டுமென்பதன் இலட்சிய கீத தும்.

✲

அடிமை அடிப்பீடம்

7-ம் பக்கத் தொடர்ச்சி

தே, தாங்க முடியாதனவற்றை லாம் திணித்து அவர்கள் ளயை ஒன்றுக்கும் உதவாக்கரை கவேண்டாம் என்று சொல்கி ம். உலகியல் அறிவு பெற ஆங் மும், தன்மொழிதனை அறிந்த மையும் பெற்றுவிட்டபின், குழந் கள், பெரியவர்களானபின் அவர் எம்மொழி வேண்டுமானாலும் றுக்கொள்ளட்டுமே!

* * *

ந்தி இங்குதிணிக்கப்படுவதன் நோக்கம், இந்தியாவில் பலரால் பேசப்படும் மொழியாக இருக்கிறது என்று கூறப்படும் காரணத்துக்காக அல்லவே அல்ல. அதுதான் காரண மென்றால், ஆரம்ப வகுப்புகளை விட்டுவிட்டு கல்லூரி வகுப்புகளில் கூட அதைக்கற்றுத்தர ஏற்பாடு செய்யலாம்!

ஆனால் இந்தி இங்கு நுழைக்கப் படுவதன் அந்தரங்க ஆசையே, வாழ்ந்துவீழ்ந்த பழந்தமிழ்மரபை நீங்கா அடிமையாக நெடுந்துயிலில் ஆழ்த்திவிடவேண்டுமென்பதுதான். ஆர். கே. சண்முகம் அவர்கள் கூறு வதுபோல "நாட்டை அடிமைகொள் ளும சுலபவழியாக இந்திமொழி யைத் திணிக்க முயல்வது" தான் அவர்களுடைய அடங்கா முயற்சி யாக இருக்கிறது.

ஒருநாட்டைப் பலம் கொண்டு வெல்வது பெரிதல்ல. அந்தவெற்றி நீர்க்குமிழி! வெற்றியடைந்தவன் நீணடநாள் மகுடாதிபதியாகவே மகிழ்ந்து இருந்துவிடமுடியாது. தோல்விகொண்டவன், மீண்டும் வெற்றிபெற்றுவிடுவான். இது சக ஜம்! ஆனால், ஒருநாட்டை, அங்கு வாழும் மக்களை போர் நடத்தாம லும் வெற்றி பெறமுடியும். இந்த வெற்றிக்கு இரத்தம் சிந்தவேண்டிய அவசியமில்லை. புத்தியில் விவேகம் உதட்டில புன்சிரிபபு, அன்பு தவ ழும் வார்த்தைகள், ஆசைசொற்கள் இவை போதும்.

அந்த நாட்டின் கலாச்சார வாழ்வைச் சூரையாடி, அதன்மொழி யையும் இரண்டாந்தரமானதாக்கி விட்டால் இயற்கையிலேயே அந்நாட் டுக்குடையவன் அடிமையாகி விடு வான். இந்த அடிமைத்தளை—இலே சில் அறுக்க முடியாதது. உள்ளத் திலும்; உடலிலும், உணர்விலும் உறவின்றி, ஊறிப்போய்விடும். கட்டுப்பட்ட மக்கள், மலைப்பாம்பின் வாயில் அகப்பட்டது போல் ஆகி விடுவார்கள் அவ்வளவுதான், மீண் டும் அழிந்த அந்த கலாச்சாரமும் மொழியும் தலைதூக்கி புதுவாழ்வு காண்பதென்பது, ஒருபோதும் ஏற் படமுடியாது. இப்படிப்பட்ட, வாள் ஏந்தாது, வாய்ச் சொல் மட்டும் ஏந்தி எடுக்கப்பட்ட படையெடுப் புக்கு ஆளாகியதன் காரணமாகத் தான் அழகு தமிழகம், அழிந்தது! காளான்கள் முளைத்தன!

இன்று, அந்தகால இருளுக்குள் போய்க்கொண்டிருந்த தமிழகத்தில், மறுமலர்ச்சி வீசத் துவங்கியுள்ளது. அதன் விளைவாக புத்துணர்வும், புதுமகிழ்ச்சியும், அரும்பி, மலர்ந்து கொண்டிருக்கிறது.

இந்நிலையில், இன்னுமொருமுறை இந்நாட்டை மொழி ஆதிபத்தியத் துக்கு, உள்ளாக்குவதா! மொழி அழிந்தால், நம்வழி மட்டுமல்ல வாழ்வே நாசமாகிவிடாதா! ஆசை காட்டி, நுழைக்கப்படும் இந்தி ஒரு 'ஆட்கொல்லி!' ஒரு பழந்தமிழ்ச் சமுதாயத்தை, பண்பாட்டை எரிக்க வரும் தீ!

●

## உணவு.

—

நடைமுறை ஆண்டுக்கு இந்தியா முழுமைக்கும் தேவையென்று மதிப் பிடப்பட்ட உணவுப் பொருள் 42,40,000 டன்கள். இதில் கிட்டத் தட்ட அக்டோபர் வரை 37,00,000 டன் கொள்முதல் ஆகியிருக்கிற தாம்!

—

## அது, அங்கு!

—

உணவு உற்பத்திப் பெருக்கத்துக் கென 1950—51க்கு ரூ 10 கோடி செலவிட ஐக்கிய மாகாண சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. இப்போது மூன்றுகோடி ரூபாய்தான் செலவி டப் பட்டு வருகிறதாம்!

இம்மாதமுதல் டொராய் என்ற வட்டாரத்திலிருக்கும் 8 லட்சம் ஏக் கர் நிலங்களைப பண்படுத்த 365 டிராக்டர்கள், அங்கு வேலை செய் யத் துவங்குமாம்!

—❀—

## தெரியுமா?

—

சென்ற ஆண்டில் சர்க்கார் உப யோகத்துக்கென 2.91 கோடி ரூபாய் மதிப்புள்ள தபால் தலைகளை இந்திய சர்க்கார் உபயோகப்படுத்திக்கொண் டுள்ளது. இதில், காலணாமுதல் எட் டணாவரையிலுள்ள தபால் தலை களின் மதிப்பு 2.10 கோடி ரூபாய். மிச்சமுள்ளவை 1 ரூபாய் முதல் 10 ரூபாய் வரையில் மதிப்புடை யவை!

—0—

# கம்ப நண்பர்களுக்கு!

கம்பர் மாநாடு, இந்த ஆண்டும் நடைபெறப் போகிறதாம் — நவ. 10-ந் தேதி முதல் மூன்று நாட்களுக்கு. முன்னாள் இந்திய மந்திரி முதல், இப்போதைய மாகாணப் பிரதமர் உள்பட, ரசிகமணிகள் யாவரும் கூடிநின்று நடத்துவிக்கப் போகிறார்களாம்.

கம்பரைக், காயும் வம்பிலிருந்து, கரையேற்ற வேண்டும் என்ற வீம்பு உணர்ச்சி காரணமாக, நடத்துவித்துக் காட்டப்படும் ஒரு நிகழ்ச்சி இது. குறள் போற்ற, திருவள்ளுவர் நாள் நடத்த, சிலப்பதிகாரச் செல்வர் தினம் கொண்டாட, புறநானூறு பற்றிப் பேச, முன்வராத் அழைத்தாலும் முகத்தைத் திருப்பிக்கொள்ளும் நபர்கள், சேர்ந்து —சேர்க்கப்பட்டு என்றாலும் பொருந்தும்—நடத்துவதுதான் இந்தக் கம்பர் விழா!

கம்பர் கவிஞன் என்று கூறிக்கொள்வதிலே நமக்குக் கஷ்டமில்லை. கம்பராமாயணத்தை ஒரு "கதை" என்று சொல்லட்டும்; ஒப்புக்கொள்ள நமக்கும் அருவருப்பில்லை. கம்பரின் காவியத்திலே, கம்பரசத்திலே, ரசிகமணிகள் காணும் சுவையை அறியும் தன்மையோ உணரும் உள்ளமோ இல்லாதவர்களல்ல நாம். குற்றாலக் குறவஞ்சியில், கலிங்கத்துப் பரணியில், அகநானூற்றில், மணிமேகலையில் காவிய ரசனையையும், கற்பனைத் திறனையும் கண்டு மகிழும் நம் தமிழ் உள்ளம், கம்பரின் கவிதையிலே இருக்கும் சுவையை அறிய மட்டும் சுருங்கி விடாது; இன்னும் கூறவேண்டுமானால் "கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்ற வரிகளைக் காணும் பொழுது, ரசிகமணிகளை விட, ஒருபடி அதிகமாகவே நம்மால் ரசிக்க முடிகிறது. நமக்கும், கம்பருக்கும் உள்ள கருத்து வேற்றுமையெல்லாம், அவர் காவியச் சுவை பற்றியதல்ல.

கம்பர் — கம்பநாட்டாழ்வார் ஆனது. 'கதை'யாகக் கருதப்பட வேண்டியஇராமாயணம்"தெய்வமாக் காதை"யாகச் சிருஷ்டிக்கப்பட்டது. கதாபாத்திரங்கள் "தெய்வங்களாக" கருதும்படி செய்யப்பட்டது. நாட்டுப்புறத் திண்ணை முதல், நகரத்தில் மிளிரும் மாளிகைகள் வரை கம்பராமாயண காலட்சேபமும், பட்டாபிஷேகத் திருவிழாவும் நடத்தப்படுவது. இவை போன்றவைகளால் இன்னும் இந்நாட்டு மக்கள் சரித்திரம் வைத்துப் பின்னப்பட்ட ஒரு கதையைத் தங்கள் தெய்வத் திருவிளையாடல் புராணமென்று கருதிக்கொண்டு கிடப்பது—கருத்து வளராமல், ஒரு நாட்டிற்குள் குடிபுகுந்த வேறு இனத்தின் வரலாறு பூசி மெழுகப்பட்டு மக்கள் மனத்துக்குத் தெரியாமல் திரையிடப்படுவது, அதற்குக் காரணகார்த்தாக்களாக 'கம்பர்— கவிஞன்' என்று கூறிக்கொண்டு நமது பண்டிதமணிகள், 'கம்'பந்தாங்கி'களாக இருப்பது, ஆகியவைகளை நம்மைக் கம்பர் யார், என்று திரைகிழித்துக் காட்டவேண்டிய அவசியத்தை உண்டாக்கியதாகும். கம்பர் கவிதைநூல், ஒரு கதை. கடவுளின் கதையென்று புனைந்துரைக்கப்பட்ட, ஒரு நாடும் அதன் இனமும் வீழ்ச்சியடைந்த வரலாறு மறைக்கப்பட்ட, ஒருநூல் கம்பராமாயணம். அதற்குக்கட்டியக் காரனாகயிருந்தவர் கம்பர், என்று உலகுக்கு எடுத்துக்காட்ட வேண்டியதன் விளைவாகவே 'கம்பராமாயணத்தைத் தீயிலிடுவோம்!' என்ற கிளர்ச்சியும் எழுப்பப்பட்டது.

கம்பரை, ஆழ்வாராக்கி, தெய்வப் பட்டியலில் இடந்தேடித்தர முனைந்து முயலும் 'தர்ம' கர்த்தாக்களே, கம்பரின் கடவுள்பக்தி சொட்டுவதா கம்பராமாயணம் பாரீர், என்று காட்டுமுகத்தான், பிழிந்து தரப்பட்டதுதான் "கம்பரசம்!"

ஆனால், இன்று கம்பராமாயணத்தின் தன்மை பற்றி மக்களிடையே
சுயமரியாதைக்காரர்கள் ஆற்றி
தொண்டின் விளைவாக நன்
விளங்கிவிட்டது. 'பக்தி'யும் சி
தையும் குன்றி, சாதாரண கவி
நூல் என்ற அளவில், மாணவர்
களும், இளைஞர்களும் கருதிப்படி
வரத்தலைப்பட்டுள்ளனர். நா
எந்த எண்ணம் ஈடேறவேண்
மென்று எண்ணிக் கம்பரைக் கா
தோமோ, அந்த எண்ணத்து
வெற்றி கிடைத்துக்கொண்டு வரு
றது. ஆகையால், 5-ந் தேதி
'விடுதலை" இதழில் பெரியார் அ
களால் எழுதப்பட்டிருக்கும் தலை
கத்தில் எடுத்துக்காட்டப் படுவ
போல்,

"இன்று அவைகளை நம்பி
பிழைக்கின்ற, மேன்மைஅடைகின்
உயர்வாழ்வு வாழ்கின்ற மக்க
யாவரும் இச்சமயம் ஒன்று சேர்ந்
எதிர்ப்பிரச்சாரம் செய்கிறார்கள்."

எப்படியாவது, கம்பராமாயண
தின் கடவுள்தன்மையைக் காப்பா
றவும், அதன் மூலம் ராமன் ராம
ராகவும்! சீதை சீதாதேவியாகவு
இவர்கள் தேவ அவதாரங்களாகவு
கருதப்படும் நம்பிக்கை மறக்கடிக்க
படாமலிருக்கவேண்டும் என்ற ஆ
யும், பழைமைக்கு மரியாதையு
வைதிகத்துக்கு மதிப்பும் தேடித்
விரும்பும் கூட்டத்தார், முன்ன
யில் நின்று கம்பருக்கு விழா எடு
முனைந்து வருகின்றனர், போலி
பாதுகாப்பு, பொதுமக்களைப் ப
சோதித்து உள்ளேவர அனுமதி
கும் முறை ஆகியவைகளைக்
கொண்டு.

கம்பர் மாநாடு, நடத்தும் கண்ண
யர்களின் அந்தரங்க ஆசையும், ஆ
வமும் கம்பரின் கவிதைபால் ஏ
பட்டதல்ல. அவர் காதையின்பா
அதில்வரும் 'தெய்வ சிருஷ்டி'க
பால் ஏற்பட்டதுதான் என்பதை
நாம் அறிவோம்.

முன்னேறிக் கொண்டிருக்கு
உலகத்தில், செல்வாக்கும் வசதியு
பிரச்சார பலமும் இருக்கிறது என்
கிற காரணத்திற்காக எத்தனை நாட்
களுக்குத்தான் சரித்திர நிகழ்
சியை மூடித் திரையிட்டு வைக்
முயற்சிப்பது நீடிக்கமுடியும்! மு
யாது, உலகம் விழித்துக்கொண்டி
ருக்கிறது, என்பதைக் கம்ப நண்ப
கள் அறிவார்களாக.

சிட்னிரீலி

# சதியும் கதியும்

[வாணன்]

ஷ்யாவுக்கும் முதலாளித்துவ
களுக்குமிடையேவளர்ந்துவரும்
மாச்சரியம் இன்று நேற்று ஏற்
தல்ல. பொதுவுடமை, ரஷ்யா
மலர்ந்த நாள்முதல் ஆரம்பமா
தான் இந்தக் குரோதமும்,
வஷமும், வெறுப்பும். 1917
பர் 7ஐக் கண்ட முதலாளித்துவ
கள் கலங்கின. அமெரிக்கா, இங்
ந்து, பிரான்சு, போன்ற வல்ல
நாடுகளின் முதலாளிவர்க்கம்
சியில் வெற்றி கண்ட பாட்
ிவர்க்கத்தின் பலத்தையும், திற
ம் கண்டு திடுக்குற்றது, தங்கள்
வே பறிபோவது போல் பதறி
எப்படி 'இவர்கள்' புது அர
கத்தைப் போக்கடிப்பது, கம்யூ
டுகளின் குடியரசைக் கவிழ்ப்
என்றமுயற்சிகளில் ஈடுபட்டது.
நவம்பர் 7 பார்முழுதுமே
மேட்டுக் குடியினரைக்
க்கிவிட்டது. அதன் விளைவாக,
சமதர்மக் குடியரசுக்கெதிராக
லாளித்வ நாடுகள் "முகாம்"
மத்துக்கொண்டு, ஈடுபட்ட
ல்கள் பல உண்டு. அவைக
முகன்மையும், குறிப்பிடக் கூடி
மான சம்பவம் இது. நவம்பர்
துப் பின் பல ஆண்டுகள் ரஷ்யக்
ரசைக் கவிழ்க்க முயன்றும்,
வு விபரீதமாக ஆகியது. அந்த
த முடிவுக்கு ஆளாகிய நபர்
னி—ரீலி. இங்கிலாந்தின்
ாள்!

* * *

918ம் ஆண்டுத் துவக்கம். ஆண்
டு காலமாக, அட்டகாசம்
துவந்த ஆட்சியை முறியடித்து
றி கண்ட பாட்டாளி வர்க்கத்
வர்கள், பெற்றெடுத்த உரிமைக்
தையைப் பேணி வளர்ப்பதில்,
ணற்ற இடையூறுகளை எதிர்
க வேண்டியிருந்தார்கள். அதி
பறிக்கப்பட்ட அட்டகாசபுரி
ின் சதி, வாலறுந்த நரி
ான மதக்குருமார்களின் தந்தி
ஜார் மன்னனைச் சேர்ந்தோரின்
சூழ்ச்சி, எதிர்க் கட்சிகளின் தொல்லைகள் அத்தனையையும் அவர்கள் சமாளிக்கவேண்டியிருந்தார்கள்.

இந்த நிலையில் பீட்ரோகிராடில் "மாஸினோ" என்ற பெயர் பூண்ட ஒருவன் தோன்றினன். நடுத்தர வயதுடைய மாஸினோ பார்ப்பதற்கு அழகுடனும், கவர்ச்சிகரமான முக வெட்டுடனும்விளங்கினன். தன்னைப் பற்றி விசாரித்தவர்களுக்கு தான் ஒரு துருக்கிநாட்டு வியாபாரி என்று கூறிக்கொண்ட அவன் நடவடிக்கைகள் அத்தனையும் விசித்திர மயம்! மாலை நேரங்களில் மாஸினோ தெருக்கோடியிலுள்ளஹோட்டலுக்கு விஜயம் செய்வான். அந்த ஹோட்டலில்தான் சோவியத் அரசாங்கத்தின் எதிரிகள் கூடுவது வழக்கம். அங்கே மாஸினோ அநேகரை இரகசியமாகச்சந்தித்துப் பேசியபடியிருந்தான். அவனுக்குப் பல மொழிகளில் பாண்டித்தியம் இருந்தது. இந்த சமயத்தில் பீட்ரோ கிராடுக்கு ஜெர்மன் படையெடுப்பு வருமோ என்று பயந்து ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோவிற்கு மாற்றப் பட்டது. தலைமை அரசாங்கம் மாற்றப்பட்டதும்அதைபபின்தொடர்ந்து மாஸினோவும்மாஸ்கோவிற்குச்சென்றான். அங்கே சென்றவுடன் அவன் நடை உடை, பாவனைகளே மாறி விட்டது. லெனின்கிராடில் வியாபாரியாகத்தோற்றமளித்த மாஸினோ மாஸ்கோவில் ஒருதொழிலாளியாகத் தோற்றமளித்தான்.

ரஷ்ய அரசாங்கத்தின் தலைமைக் காரியாலயம் இருக்கும் கிரம்லின் நகருக்குள் நுழைந்தான். நகரெல்லையில் காவல் காத்துவந்த ரஷ்ய போர் வீரன் மாஸினோவைத் தடுத்தான். "உள்ளே நுழைய உத்தரவுச் சீட்டு?" என்றான். மாஸினோ கொஞ்சமும் தயங்கவில்லை. தன் பையிலிருந்து ஒரு 'உத்தரவுச் சீட்டை'க் கொடுத்தான். கம்யூனிஸ்ட் படை வீரன் 'நுழைவுச் சீட்டை' பரிசோதித்துவிட்டு சிரித்த முகத்துடன் "போகலாம், காம்ரேட்ரெலின்ஸ்கி!" என்றான். மாஸினோவும் சிரித்துக் கொண்டே கிரம்லினுக்குள் சென்றான். அவன் காவலாளியிடம் காண்பித்த 'நுழைவுச் சீட்டு', அவனை லெனின் கிராட் 'செக்கா' (செக்கா-ரஷ்ய ஒற்றர் படை)வைச் சேர்ந்த ஒற்றன்என்றுகாண்பித்தது! அந்தச் சீட்டில் 'செக்கா'வின் தலைமைப் பீட முத்திரை இருந்தது. ஆனால் மாஸ்கோவின் மற்றொரு மூலையிலுள்ள நாட்டிய மன்றத்திலோ மாஸினோவின் பெயர் 'கான்ஸ்டான்டின்' என்று கூப்பிடப்பட்டது! அங்கு, அந்தப் பெயரில் அவன் உலவினன்!

நாட்டியமன்றத் தலைவி'டாக்மாரா' என்பவனுக்கு பழக்கமான நண்பன் என்ற முறையிலே அந்த இடத்திற்கு அவன் விஜயம் செய்தான். அவனைப் பிரிட்டிஷ் இரகசிய ஸ்தாபனத்தின் ஏஜண்ட் என்ற அளவில் தான் அங்கு சிலருக்குத் தெரியும்.

ஆனல் இந்த 'மாஸினோ', 'காம்ரேட் ரிலின்ஸ்கி', 'கான்ஸ்டான்டின் பிரபு' என்று பெயர் கொண்ட மனித உருவம் உண்மையில் யார் என்பது பிரிட்டிஷ் தூதுவர் காரியாலயத்தை சேர்ந்தவர்களுக்குத்தான் தெரியும்! மாஸினோவின் உண்மைப் பெயர் "சிட்னி ரீலி!" பிரிட்டிஷ் ஒற்றர் படைக் கூட்டத்தில் ரீலியை மிஞ்சிய ஒற்றர்கள் கிடையாது!

• • •

ஜார் மன்னன் காலத்தில் அயர்லாந்து தேசத்துக் கடற்படை தளபதி ஒருவனுக்கும் ரஷ்யப் பெண்மணி ஒருத்திக்கும் பிறந்த சிட்னி ரீலி பிரிட்டிஷ் ஒற்றர் படை வரிசையில் வந்தது. விசித்திரம்தான். மகாயுத்தம் நடந்து கொண்டிருந்த சமயம். 1916-ம் ஆண்டு. சிட்னி ரீலி ஜெர்மனிக்குள் நுழைந்தான். ஜெர்மன்கடற்படைத் தளபதிகளில் ஒருவன்போல் வேஷம் போட்டுக்கொண்டு கடற்படைத் தலைமைக் காரியாலயத்திற்குள் நுழைந்தான்.

அதன் பலன் ஜெர்மன் கடற்படையின் இரகசிய பேச்சு வார்த்தைகள் அடங்கிய ரிக்கார்டை (German Naval Intelligence Code) நேச நாடுகளுக்கு ரீலி கொண்டுவந்தான். சென்ற மகாயுத்தத்தில் ஒற்றர்கள் செய்த உதவிகளிலெல்லாம் பெரியது ரீலி செய்த இந்த உதவிதான்.

1918-ம் ஆண்டு ஆரம்பத்தில் 'பிரிட்டிஷ் அரசாங்கத்தின் இரகசிய இலாகாவின் டைரக்டர்' என்ற பதவிக்கு ரீலி ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்டான். அவன் வேலையெல்லாம் சோவியத் நாட்டில் அப்பொழுதிருந்த எதிர்ப்புச் சக்திகளை ஒன்று சேர்க்கும் வேலையில் பிரிட்டிஷ் அமெரிக்க ஸ்தானிகர்களுக்கு உதவவேண்டியதுதான்.

1918-ல் ரஷ்யாவில்புது அரசாங்கத்துக்கு எதிராக இருந்த கட்சி 'சமுதாயப் புரட்சிக்கட்சி' என்பதுதான். ஜாரை ஒழிப்பதில் ஒத்துழைத்து ஈடுபட்ட இவர்கள் ஜார் முறியடிக்கப்பட்டுப்புது ஆட்சிமலர்ந்ததும், புது ஆட்சியை ஒழிப்பதிலும், லெனின் போன்றுரைச் சுட்டுத்தள்ளுவதிலும் இவர்கள் நோக்கம் பயங்கரமாகப்பாதைமாறியது. இதற்குத் தலைமை தாங்கி நடத்தியவன் போரிஸ் சாவின் கோவ். இந்தச் சூழ்நிலையை முதலாளித்துவ நாடுகள் பயன்படுத்திக்கொள்ள முயன்றன. இதன் விளைவாக ரீலி, இவனுடன் தொடர்பு கொண்டு, இவர்கள் பயங்கர இயக்கம் உருவெடுக்க ஒத்துழைத்தான்.

ரீலியின் ஆட்கள், ரஷ்ய ராணுவ காரியாலயங்களிலும் இருந்தனர். ஆகவே ரஷ்ய அரசாங்கம் செய்யும் ஒவ்வொருகாரியமும் அவ்வப்போது ரீலிக்குத் தெரிந்தவண்ணமிருந்தது. இந்தப்பிரம்மாண்டமானவேலைகளைச் செய்ய ரீலிக்கு வேண்டிய பணம் மாஸ்கோ நாட்டியராணி டாக்மாரவினிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

* * *

1918-ம் ஆண்டு ஜுன் 2-ம்தேதி பீட்ரோகிராட் தொழிலாளர் கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த சோவியத் அரசாங்கத்தின் விளம்பர மந்திரி வோ ார்ஸ்கி சமுதாயப்புரட்சிக் கட்சிக்காரன் ஒருவனுல் கொல்லப்பட்டார். அதைத்தொடர்ந்து மாஸ்கோவிலிருந்த ஜெர்மன் தூதுவர் மிர்பாக் ஜுலை ஆறும்தேதி கொல்லப்பட்டார். ஜெர்மன் தூதுவரைக் கொன்றுல் ஒருசமயம் ஜெர்மனி ரஷ்யாமேல் படையெடுக்கும். அதன் மூலம் போல்ஷிவிசம் ஒழியும்என்று சமுதாயக் கட்சிக்காரர்களுக்கு ஒரு எண்ணம்.

ஜெர்மன் தூதுவரைக் கொன்ற அதேநேரத்தில் மாஸ்கோவின் மற்றொரு மூலையில் 'மாஸ்கோ ஆபரா ஹவுஸில்' அகில ரஷ்யசோவியத் காங்கிரஸ் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. ரஷ்யாவின் பலபாகங்களிலிருக்கும் மக்கள் பிரதிநிதிகள் வந்து கலந்துகொண்டிருந்தார்கள். காங்கிரசின் நடவடிக்கையைக் கவனிக்க வெளிநாட்டுத் தூதுவர்களும் ஆபரா ஹவுசின் மற்றொரு பாகத்தில் அமர்ந்துகொண்டிருந்தனர். சோவியத் பிரதிநிதிகள் 'வருங்கால' ரஷ்யாவைப் பற்றிக் கவலையுடன் விவாதித்துக் கொண்டிருந்தனர்.

ஜெர்மன் தூதுவர் மீர்பாக்கைக் கொன்ற மறுவிநாடி முதலே தன் வேலைத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று ரீலியால் முடிவு செய்யப்பட்டது. அவன் திட்டப்படி மீர்பாக்கைக்கொன்ற பிறகு சமுதாயப்புரட்சிக் கட்சியின் தொண்டர்கள் ஆபராகஹவுசைப் படையெடுத்து அங்கேயுள்ள சோவியத் பிரதிநிதிகள் அத்தனை பேரையும் கைது செய்துவிடவேண்டும். பிறகு ரஷ்ய அரசாங்கமே நம்கையில்தான்! என்று திட்டமிட்டிருந்தான் ரீலி. ஆனால் சூழ்ச்சி பலிக்கவில்லை! கலகக்காரர்களை அடக்கிவிடக்கூடிய அளவுக்கு ஆபரா ஹவுஸின் வெளியில் செஞ்சேனை வட்டமிட்டுக்கொண்டு சுட்டுக்கொண்டிருந்தது.

சிலமணி நேரத்தில் குண்டுசப்தம் நின்றது. ஆபராஹவுஸின் மேடையில் தோன்றிய ரஷ்ய அரசாங்கப் பிரதிநிதி ஒருவர் பின்வருமாறுகூறிவிட்டு இறங்கினர்.

"சோவியத் அரசாங்கத்தைஒழிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கலகம் ஒன்றை ஆரம்பத்திலேயே நசுக்கிவிட்டனர் செஞ்சேனை வீரர்கள். சமுதாயப் புரட்சிக் கட்சியை சேர்ந்த பலர் ஆயுதங்களுடன் கைதியாக்கப்பட்டுள்ளனர்."

பின் ஒருநாள் பொதுவுடைமைச்சமுதாயம் கண்ட மாவீரர் லெனின் தொழிலாளர் கூட்[டம்] ஒன்றில் பேசிவிட்டு வெளி[யே]றுகையில "பேன்யா கப்லான்" என்றபெண்மணி இருமுறை அவ[]ரைச்சுட்டாள். நல்லவேளையாக[] கழுத்திலேற்பட்ட காயங்களுடன் அவர் தப்பினர்!

இத்தனை 'சதி' செயல்களுக்கும் காரணகர்த்தா ரீலிதான். ரீலி, சமுதாயப் புரட்சிக் கட்சியினரைக் கொண்டு சாதிக்க நினைத்த தந்திரச் சூழ்ச்சிகள் யாவும், வெற்றிதா[] வில்லை. ரீலி, சமதர்மக் குடியரசை முளையிலேயே கிள்ளிவிட எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்காக, பணத்தைச் சரமாரியாகச் செலவிட்டான். அதற்கான வகையில் ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளும், அவனுக்கு உதவிக்கொண்டேயிருந்தன.

கிரெம்லின் நகர்ப்பாதுகாப்புப் படைத் தலைவன் கர்னல் பேர்சின் என்பானைக்கூட 'பணம்' காட்டித் தன் வலையில் வீழ்த்தினன், ரீலி! அதுமட்டுமல்ல, அடிக்கடி ரஷ்யாவிலிருக்கும் முதலாளித்துவ நாடுகளின் பிரதிநிதிகளைக் கூட்டித் தனது வீரதீரப் பிரதாபங்களைச் சொல்லி, ஆலோசனை புரிந்துகொண்டே தனது சூழ்ச்சிகளில் ஈடுபட்டான்.

லெனினைக் கொல்ல முயன்றபின், ரீலியின் கையாளான கர்னல் பெர்[சின்]ஸின் சதிச்செயல்கள் யாவையும் வெளிப்படுத்தி விடவே 'செக்கா' மும்முரமாக முயன்று சதிக்காரர்களையும், துரோகிகளையும் கைது செய்தது. ரீலியும் தேடப்பட்டான். ஆனால், அவனே ஒரு சமயம் கிரீஸ் நாட்டு வியாபாரி! சில காலம் ஜார் காலத்திய ஆபீசர்! சில சமயம் சோவியத் ஊழியன்; கம்யூனிஸ்ட் தொழிலாளி! இப்படி உருமாறி, உருமாறி, உலவிக்கொண்டிருந்து விட்டு, ஜெர்மன் சர்க்காரின் முத்திரையுடன் பொய் 'பாஸ் போர்ட்' தயாரித்துக்கொண்டு நார்வே சென்று, இங்கிலாந்து சென்றுன்!

1924 ஜனவரி 21ல் மாவீரர் லெனின் மறைந்தார். வெற்றிவீரன் சாவுகண்டு, ரஷ்ய மக்கள் தத்தளித்துத் தவிக்கையில், முதலாளித்துவ நாடுகள் போல்ஷிவிக் கட்சி புதைந்துவிடும் என்று குதூகலித்தனர்.

(2-ம் பக்கம் பார்க்க)

# 'எருமை'யும் பெருமையும்

குளிக்கப்போய்ச் சேற்றைப்பூசிக்
காள்ளும் எருமைகள் போல
க் கூடாது என்று உபதேசம்
ந்துள்ளார் இந்திய கவர்னர்
னரல் இராசகோபாலாச்சாரியார்!

அமிர்தமாக இருக்கவேண்
தை விஷமாக ஆக்கிக் கொள்
ா என்று வேதனையுடன் கேட்டு
ட்டு, 'எருமைகள் உதாரணத்
க்கூறி, மதம் காரணமாக வேற்
மை நினைவுகளும் துவேஷப்
ல்களும், இரத்த வேட்டையும்
படாமல் இருக்க வேண்டும்
று அறிவுறுத்தியுள்ளார்.

பல மதங்கள் உலகினுலும், எல்
ம் கூறுவது ஓரே பொருள்
னென்றுப், எனவே, மக்கள் மதப்
ட்டிகளுக் காளாகித் தங்களைத்
ங்களை மாய்த்துக் கொள்வது,
ருந்தத் தக்கது, விரும்பத் தக்க
ல என்று விளக்கமாக "எருமை"
ன் கதையை ...டுத்துச் சொல்லிப்
த்தி கூறியுள்ளார்!

மதம் — என்ற வார்த்தையின்
டிப்பீடமே மாச்சரியமும், மனக்
ரோதமும் தானே என்று கேட்
தோன்றும், சிந்தனையில் தெளி
ள்ளவர்களால். மதம் விளைவித்த
ன்னல்களும், இரத்தக்களரிகளும்,
ண்ணற்றவை ஆயிற்றே, 'மதம்
களின் அபினி' ஆயிற்றே, அவர்
வாழ்வு வேதனை மயமாகுவதன்
தல காரணமே மக்கள் பகுத்
வை 'பக்தி' என்ற வார்த்தை
லம் கொள்ளை கொள்ளும் மதம்
னே, என்றெல்லாம் கேட்கத்
ன்றும், மூடநம்பிக்கை முறிய
த்து, பேதா பேதம் இல்லாது
ித இனம் முழுமையும் மனித
மாகவே வாழவேண்டும் என்ற
ண்ணங்கொண்டவர்களுக்கு.

ல்லெண்ணத்தை நாத்திறந்து
டுக்குச் சொல்ல முன்வந்தால்
ன், சங்கராச்சாரி முதல் 'சக்கர
த்தி'யார் வரையுள்ளவர்களின்
சலமும் சங்கடமும் தாக்கி நாஸ்
பட்டம் சூட்டப்படுகிறதே!
இப்போது, கவர்னர் ஜெனரலின்,
கருத்துக்கண்டு நாம் குறிப்பிட
விரும்புவது அவருடைய சமரச சன்
மார்க்கத் தன்மை பற்றியோ, விரிந்த
மனப்பான்மை—பரந்த சிந்தையைப்
பற்றியோ அல்ல! மதம், என்பது
இருக்கு மட்டும், மக்கள் அவை
களுக்கு ஆட்பட்டிருக்கும் வரை
யிலும் மாச்சரியமும், மனிதரை
மனிதர் வெறுக்கும் தீமையும்
தாண்டவமாடிய வண்ணம் தான்
இருக்கும்.

கவர்னர் ஜெனரல், இந்த அடிப்
படைபற்றி அறியாதவரல்ல, வேற்று
மையும் விஷவித்தும் எங்கு இருக்
கிறது என்று தெரியாதவரல்ல,
'மதம்' என்றொன்று இல்லாவிட்டால்
என்ன ஏற்படடுவிடும் என்று சிந்தித்
துப் பார்க்க நேரமோ, அவகாசமோ,
வசதியோ இல்லாதவரல்ல! எனினும்,
சனாதனம், வைதிகம், அதன் காரண
மாகச் சோபிக்கும் 'சொகுசு'
வாழ்வு, மதம் வேண்டுமா வேண்
டாமா என்பதைவிட, அது ஏற்பட்
டது எதற்காக, ஆனால் எந்நிலையில்
இருக்கிறது இன்று, என்று விளக்க
முற்பட்டு விமர்சனம் தந்துள்ளார்
அமிர்தத்தை நஞ்சாக்குவதா, குட்
டையைக் குழப்பும் எருமையாவதா!
என்ற, குட்டிக்கதைகள் மூலம்.

"மதம்" என்ற போர்வையின்கீழ்,
பற்பல நம்பிக்கைகளுக்கும், கோட்
பாடுகளுக்கும் இடையே கிடக்கும்,
மக்களுக்கு அவர் உபதேசித்துள்
ளார், அன்பையும் ஐக்கியத்தையும்
நிலைநாட்ட வேண்டிய மதத்தைக்
குரோதத்துக்கும், துவேஷத்துக்
கும், இரத்தம் சொட்டுவதற்கும்
ஆளாக்கிக் கொள்ளுகிறீர்களே,
செய்யலாமா, என்று!

எல்லா மதமும் நம்புவது ஒரு
'மகா சக்தி'யைத்தான், எனவே, பல்
வேறு மதங்களுக்கும் இடையே
உள்ள லட்சியத்தை மக்கள் உணர
வேண்டும்; பொறாமையும் துவேஷ
மும், நம்முடையதுதான் சிறந்தது
என்ற பெருமையும் கொண்டு,
மதத்தை யுத்தகோஷமாக ஆக்கக்
கூடாது; உள்ளம் பரஸ்பர அன்
புள்ளதாக இருக்கவேண்டும் என்று
எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

பல மதங்கள் இருக்கின்றன,
அவை கூறும் எல்லாம் ஒரே முடி
வைத்தான் குறிக்கின்றன. ஆகவே,
ஏன், தற்பெருமையும் தகாத செயல்
களும், மக்களாகிய, நம்மிடையே ஏற்
பட வேண்டும் என்று கேட்டுவிட்டு,
போதனை புரிந்துள்ளார், பரந்த
மனப்பான்மையுடன் எல்லா மதத்
தினரும் வாழ வேண்டும் என்பதற்க

விசால நோக்கும், எம்மதமும்
சம்மதமே என்ற பெருந்தன்மை
யும், என் மதம்தான் பெரியது சிறந்
தது என்ற வீண்பெருமை இல்லா
மையும் ஏற்படவேண்டும், அதுதான்
நாட்டில் அமைதியும் அன்பும் நிலவ
வழியென்று கூறுகிறார் — பன்னிப்
பன்னி வலியுறுத்திச் சொல்கிறார்!
பல மதங்களும்—இருக்கவேண்டும்;
ஆனால் அவைகளுக்கிடையே துவே
ஷமும் குரோதமும் தலைவிரித்
தாடக் கூடாது, என்று கூறுகிறார்
மேன்மை தங்கிய, 'அவர்.'

ஆனால், அவர் வலியுறுத்தும்
பரந்த மனப்பான்மையும் விரிந்த
சிந்தையும், அவரது கூடாரத்துக்
குள்ளேயே இருக்கிறதா என்று
பார்த்தால், கிடைக்கும் விடை,
வேடிக்கையானதாக மட்டுமல்ல,
விஷம் போன்றதாகக்கூட இருக்
கிறது!

இந்தஆண்டு, இந்தியசர்க்கார், புது
தபால் தலைகள் வெளியிட்டுள்ளனர்.
அவை மக்கள் மத்தியிலும் உலவி
வரத் துவங்கியிருக்கின்றன. அதை ஒரு
முறை, பாருங்கள், இந்திய சர்க்கா
ரின் பரந்த மனப்பான்மை விரிந்த
சிந்தை, எம்மதமும் சம்மதம் என்ற
தன்மை வெளியாகும் வேடிக்கையை!

கவர்னர் ஜனரல், மதம் பற்றித்
தற்பெருமை அடித்துக் கொள்ளக்
கூடாது, எல்லா மதக் கோட்பாடு
களும் ஓரே முடிவைத்தான் தரு
வன, என்று போதிக்கிறார். ஆனால்
அவருடைய அரசாங்கமோ, பல்
வேறுமதங்கள், கோட்பாடுகள், சிலை
வணக்கங்கள் கொண்ட ஒரு நாட்டு
மக்கள் உபயோகப்படுத்தப்படக்
கூடிய தபால் ஸ்டாம்புகளில், இந்து
மதக் கடவுள்களின் உருவங்களைப்
பொறித்திருக்கிறது! அதுவும் எந்
தெந்த ஸ்டாம்புகள் மக்களால் அதி
கமாக உபயோகப்படுத்தப்படுகி
றதோ, அவைகளிலேயே அந்த

(அடுத்த பக்கம் பார்க்க)

# மகிழ்ச்சி—நன்றி!

தோழர்களே !

மகிழ்ச்சிக்குரிய செய்தி. "திராவிடநாடு" இதழுக்குச் சர்க்கார் ஜாமீன் தொகை மூவாயிரம் ரூபாய் கட்டும்படி கேட்டிருந்ததைக் குறித்துத் தொடுத்த வழக்கிலே, தீர்ப்பு நமக்குச் சாதகமாகக் கிடைத்துவிட்டது.

"திராவிடநாடு" இதழிலே சர்க்கார் குறித்துக்காட்டிய கட்டுரைகள், வகுப்புத் துவேஷத்தை மூட்டுவன அல்ல என்று தீர்ப்பளித்து, சர்க்கார் உத்தரவை, சென்னை உயர்நீதிமன்றம், ரத்துசெய்துவிட்டது.

இந்தத் தீர்ப்பு, நமது தோழர்களுக்கெல்லாம், மகிழ்ச்சியும் எழுச்சியும் தந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இதனையொட்டி, சர்க்காரிடம் கட்டப்பட்டிருக்கும் மூவாயிரம் ரூபாயும், விரைவில், திருப்பித்தரப்படும் என்று அறிகிறேன்.

சர்க்காரின் அறைகூவலை எற்று, **ஜாமீன் தொகைக்காக** நன்கொடையை ஆர்வத்துடன் அளித்த தோழர்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன், மேற்படி தொகை என் கைக்கு வந்ததும், தோழர்களுக்குத் திருப்பி அனுப்ப இருக்கிறேன் என்பதையும்தெரிவித்துக்கொள்கிறேன். **ஜாமீன் தொகைக்காக** நன்கொடை அனுப்பியுள்ள நண்பர்கள், எந்த முகவரிக்கு, பணம் அனுப்பப்படல்வேண்டும் என்பதைத் "திராவிடநாடு" அலுவலகத்துக்குத் தெரிவிக்கக் கோருகிறேன்.

நெருக்கடியின்போது நன்கொடை உதவிய நண்பர்கள் பணம் திருப்பி அனுப்பப்படுவதைத் தவருகக் கருதாமல், நெருக்கடிகள் எப்போது ஏற்பட்டாலும், இதுபோன்ற ஆதரவுகாட்டும் அன்பினை எனக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறன்.

தீர்ப்பின் முழு விவரம் கிடைத்தபிறகு, "திராவிடநாடு" இதழில் வெளியிட எண்ணியுள்ளேன்.

வணக்கம்

அன்பன்,

**அண்ணாதுரை.**

திராவிடநாடு
காஞ்சிபுரம்
9—11—49

முன்பக்கத் தொடர்ச்சி

மூர்த்திகளின் உருவங்கள்!
முக்காலணு தலைகளில் திருமூர்
இரண்டணு தலைகளில் நடரா
பொறிக்கப்பட்டிருக்கின்
ஓரணுதலைகளில் போதிசத்துவர்
வமும பொறிக்கப்பட்டிருக்கிறது
மதச்சார்பற்ற சர்க்கார் எ
கூறித் திரியும், காங்கிரஸ் தலை
ளின் சர்க்கார் செய்திருக்கும்
யம் இது! இச்சர்க்காரின் தலைவ
கவர்னர் ஜெனரல், மதப் பெரு
கூடாதென்றும், குரோதமும் து
ஷமும் ஏற்பட வழி செய்யப்
கூடாதென்றும் போதிக்கிருர்,
தேசிக்கிருர்!
ஆனுல், அவருடைய சர்க்கா
தபால ஸ்டாம்புகள் மூலம் 'த
கடவுள்'களைப்பரப்பமுனைகின்ற
வாழ்வது, பலதரப்பட்ட,
மதக்கோட்பாடுகள் கொண்டமக்
அவர்களை, ஆளும் பொறுப்
யேற்று இருக்கும் சர்க்கார், எல்
ருடைய கையிலும், உலவக்கூ
இன்றியமையாத ஒன்றின்மீது
மதக் கடவுள்களின் 'திரு' உருவ
ளைப்பொறித்துவைத்துமகிழ்கிற
இந்த எண்ணம், வளர்ந்த
எப்படிப் பரந்த மனப்பான்மை
ஐக்கிய உணர்ச்சியும் ஏற்பட
யும்! மத, மனமாச்சரிய குறு
உணர்ச்சிகள் மங்கி மக்களிடை
நல்லெண்ணமும் சந்தேகமற்ற
மையும் ஏற்பட முடியும்!
பரந்த—ஒரு பெரிய—உப
டத்தை ஆளும் ஒரு சர்க்காரு
தினசரித் தேவையான, போ
வரத்து ஸ்டாம்புகளில் ஒரு சின்
பொறிக்க, கடவுள்களைத்
வேறு எதுவுமே, ஏற்பட முடிய
ஏற்படவில்லையா!
ஏன், இந்த நச்சு ஆசை
நல்லது விளைவிக்காத மனப்
மையும் ஏற்பட வேண்டும்!
கவர்னர் ஜெனரல் வலியுற
கிருர், போதிக்கிருர், அமிர்த
விஷமாக்காதீர்கள், குட்டை
குழப்பும் 'எருமை' ஆகக்கூட
என்று! ஆனுல், அவரைத்
ராகக் கொண்ட அரசாங்க
தங்கள் 'கடவுள்களின்' பெ
யைப் பரப்ப வழி காண்கின்றன
அதுவும் முரணுன வழியில்!

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram.